தென் மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

கூற்றை விளித்தனரோ?

தமிழ்ப்பகை ஆயிரம்சேர்வதுண்டோ? தமிழ்த்
  தாயை மறுப்பதுண்டோ?–அவள்
  தலையை அறுப்பதுண்டோ?–உடன்
சிமிழ்த்தெழுவாய் தமிழா! நறுந் தாய் துயர்
  சேயும் பொறுப்பதுண்டோ?–இட
  நேரம் நிறுப்பதுண்டோ?

எத்தனை ஆயிரம் காலமடா தமிழ்க்
  கின்னல் விளைத்திருப்பார்?–தடை
  பண்ண முனைத்திருப்பார்?–எறும்
பத்தனையே அவர் சேர்ந்திடினும், களி
  றேற்றை வளைத்தனரோ?–பெருங்
  கூற்றை விளித்தனரோ?

ஒத்திருப்பார்; பிழைப்பார்; என எண்ணினை!
  ஊறு நினைத்துவிட்டார்–சின
  ஊற்றில் நனைத்துவிட்டார்!–இனிச்
செத்துவிட்டார்; பிழையார்; என எண்ணிடு:
  சீறி இணைந்துவிட்டால்–ஒரு
  சேர முனைந்து விட்டால்!

சுவடி 6; ஓலை 5, 6.
இரட்டை, கடகம் (ஆனி, ஆடி)
தி. பி. 1999.

நமக்குவந்த மடல்கள்.

0 ஒண்டமிழ்க்காவல! "தென்மொழி" சுவடி 6. ஓலை 4 அட்டை உரை நடுவணரசினர்க்கும், அந்த அரசின் அறியாமை நிறைந்த அல்லது வெறித்தனம் மிக்க ஆட்சிமுறைக்கும்—கற்றறிந்தும் கண்ணில்லா இங்நாட்டு மக்களின் மானவுணர்வுக்கும் எக்காலத்தும் ஏற்றம் கொள்ளத்தக்க நல்லோரின் தீதற்ற—தீஞ்சுவைமிக்க உரை—என்பதை அறியார் மாடுகள்; மரங்கள்! நக்கீரன் உள்ளம் கொண்ட செங்நாப்புலவரே! செந்தமிழ்ப்பாவலரே! பைந்தமிழ்க்குயிலே! தாங்கள் நற்றமிழ் அன்னையை விண்ணொளி யாக்குதலில் இனியும் பாடுபடுவீராக!

—அருள்மணி, பெங்களூர்—21.

0 'தென்மொழி'யைத் தொடர்ந்து படித்து இன்புறுபவர்களில் நானும்ஒருவன். அடுக்கடுக்காய் இடர்ப்பாடுகள் வரினும்விடாமுயற்சியுடன் 'தென்மொழி'யால் தாங்கள் பாடாற்ற வேண்டும் என்று உங்களைப் பணிவன்புடன் வேண்டிக்கொள்கிறேன். என்னுடைய நண்பர்களிடம் நான் அவ்வப்பொழுது தங்கள் எழுத்தாண்மையை எடுத்தியம்புவதுண்டு. எல்லாரும் தங்களை வியந்து பாராட்டுவதைத் தங்களிடம் சொல்லாமலிருக்க முடியவில்லை. அத்தகு நண்பர்கள் இருபத்து நான்கு பேரிடம் 'தென்மொழி'யின் வளர்ச்சிக்காகப் பணம் திரட்டினேன். உருபா 26 வரை கிட்டியது. பணவிடைத்தாள் வழி அனுப்புகிறேன். இப்போதுபோலத் தென்மொழியின் சிறப்பைப் பலருக்கும்உணர்த்தி இதன்வளர்ச்சிக்கு என்னாலான முயற்சியைச் செய்துவருவேன் என்று உங்களிடம் சொல்லிக் கொள்கிறேன். ஒரு வேண்டுகோள்; காலங்கடத்தாமல் தென்மொழியை வெளியிட்டு உதவுங்கள். — க. சின்னசாமி, வேளாண்மைக்கல்லூரி, மதுரை.

0 கடந்த இரண்டாண்டுக்காலமாகத் தென்மொழியைதொடர்ந்து படிக்கிறேன். தமிழ்க்குமுகாயத்தை அடிமைத்தனத்திலிருந்துமீட்க அயராது உழைக்கும் தங்களை ஒருமுறை நேரில்பார்த்துத் தங்களின் மிகச்சிறந்த சொற்பொழிவினைக் கேட்டிருக்கிறேன். தென்மொழி இதழை, நான் எங்குச்சென்றாலும் எடுத்துச்சென்று நண்பர்களிடையே பரப்பிவருகின்றேன். திருச்சி தனித்தமிழ் அன்பர் இயக்கம் வலிவோடும், பொலிவோடும் வளர்கின்றது. விரைவில் முதல் கூட்டம் நடைபெற இருக்கின்றது. இன்று நாட்டில்ஏற்பட்டு வரும் சில பயனுள்ள வினைப்பாடுகளால் தமிழ்க்குமுகாயம் ஒன்றுபட்டு உலகம் போற்றும் உயர்ந்த சிறப்பை அடையும் காலம் விரைவில் நெருங்குகிறது. அதுபோழ்து தென்மொழிக்கே முதலிடம் கிடைக்கும் என்று உறுதியுடன் கூறுகிறேன். நிற்க. கடந்த ஒருதிங்களாக பார்ப்பனத் தாளிகைகள் தமிழுக்கும் தமிழ் அறிஞர்களுக்கும், கேடான முறைகளில் பலவற்றை எழுதி வருகின்றன. அதைஎதிர்த்துத் தென்மொழியில் ஓர் அரியகட்டுரை வேளியிடவேண்டுமென்று தமிழ் அன்பர்கள் சார்பாகக் கேட்டுக் கொள்கிறேன்.

— பொன். இராமகிருட்டிணன், திருச்சி—2.

0 தன்னேரில்லாத் தனிப்பெருந் தலைவா! தமிழ்த்தாயின் உரமிக்க உளமுற்ற பெருமகனே! தங்களது தன்னலம் கருதாத் தமிழ்த் தொண்டிற்குத் தலை தாழ்த்தி வணங்குகின்றேன். பணத்தையே வாழ்வின் எல்லாமுமாகக் கொண்டு நடைப்பிணங்களாகத் திகழும் இற்றை நாட்களின மாக்களிடை தூங்கிக் கொண்டிருக்கும் தமிழனின் தன்மானஉணர்வைத் தட்டி எழுப்புமுகத்தான் அமையும் நுங்கள் ஆசிரியஉரைகட்குச் சோடிப்பொன்னைக் கொட்டிக்கொடுத்தாலும் ஈடாகாது. கடந்தகால உலக வரலாற்றினைக் காணுங்கால

(தொடர்ச்சி 3ஆம் அட்டைப்பக்கம்)



தென்மொழி

இலக்கிய இதழ்

"கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-6: ஓலை-5,6

இரட்டை, கடகம் தி. பி. ௧௯௯௯ (1968-சூலை,ஆக:ச்டு)

பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

எச்சரிக்கை! பகைவர் இருவர்!



பகை எப்பொழுதும் இரண்டு வகைப்படும். அவை உட்பகை, புறப்பகை. உட்பகை உள்முகமாகக் கிளர்ந்து எப்பொழுதும் உள் முகமாகவே புகைந்து கொண்டிருப்பது. புறப்பகை புறமுகமாகக் கிளர்ந்து எப்பொழுதும் வெளிப்படையாகவே கனன்று கொண்டிருப்பது. உட்பகை நெருங்கியிருக்கும்; நம்மோடு உண்ணும்; உறவாடும்; நம் நலமே கருதுவது போல் பேசும்; சிலபொழுதில் சிலவற்றைச் செய்தும் காட்டும்; இவை வழி நமக்குத் தான் பகை இல்லை என்பதை ஓரளவு வலியுறுத்தியும் கூறும். புறப்பகையோ நம் நேருக்குநேர் எதிர்முகமாக, சீனர் இந்திய எல்லைக் கோட்டுக்கு அப்புறமாக இருப்பதுபோல் நின்றுகொண்டிருக்கும்; நாம் முறைத்தால் அதுவும்முறைக்கும்; நாம்

கையைத் தூக்கினுல் அதுவும் கையைத் தூக்கும்; நாம் கையோங்குமுன் அதுவும் கையோங்கும். காலம் வரும்பொழுது நாம் அதனை அழிக்க முனையுமுன், அதுவும் நம்மை அழிக்க முன் வரும். இவ்வாறுன இரட்டப்பகை உலகில் இருந்த, இருக்கின்ற, இருக்கும் எல்லா நாட்டு அரசுக்குமே, இனத்திற்குமே, மக்களுக்குமே எப்பொழுதும் உண்டு. இருப்பினும் பிற நாடுகளில், பிற இனமக்களில் இக்கால் இப் புறப்பகை யுணர்வு என்றும்போல் இருந்து வரினும், இவ்வகப் பகையுணர்வு ஓரளவு குறைந்துள்ளது என்றே கூறலாம். ஆனுல் நம் தமிழ்நாட்டிலோ, நம் தமிழ்மக்களிடத்தோ, புறப்பகை பாராட்டும் ஆரியப் பார்ப்பனரும், அகப்பகை பாராட்டும் வீடணத்தமிழரும் முன்போலவே இன்றும்—ஓரளவு கூடுதலாகவே இவ்வகப் புறப் பகைப் போராட்டங்களை நடத்திக் கொண்டுள்ளனர் என்றும் சொல்லலாம்.

ஆரியப் பார்ப்பனர் புறத்தே தம் குடுமிகளைப் பெரும்பாலும் களைந்து ஒழுகை (கிராப்) வாரிக்கொண்டிருந்தாலும், எப்படி தம் தம் சட்டைத் துணிக்குள் உடம்போடு உடம்பாக ஒட்டிக்கிடக்கும் பூணுலை அறுத்தெறியாமல் இருக்கின்ருர்களோ, அப்படியே புறத்தே தமிழரைப் போலப் பேச்சிலும் செயலிலும் பண்பாட்டிலும் இருந்து வந்தாலும், உணர்விலும், குருதியோட்டத்திலும், மூளைச் சுணப்பிலும் இன்னும் ஆரியத்தன்மைகளை-பார்ப்பனப் புன்மைகளை-பிராமணச் செருக்கை விட்டுவிடவில்லை. இவர்கள் உடம்பில் பூணுல் புரளுவது போல் நெஞ்சில் இன்னும் வேறுபாடு புரண்டு கொண்டுதான் உள்ளது. நம் முகத்தோடு முகம்வைத்துப் பேசிக்கொண்டிருந்தாலும் அகத்தில் நம்மேல் உள்ள வெறுப்புணர்வு கனன்று கொண்டுதான் இருக்கின்றது. பார்ப்பனருள் நன்கு படித்தவரும் சரி; படியாதவரும் சரி; ஆண்களும் சரி; பெண்களும் சரி; எவராயினும் இந்நிலை வேறுபாட்டை நம்மால் அன்றும் பார்க்க முடியவில்லை; இன்றும் பார்க்க முடியவில்லை. பொதுவாக நாம் எப்படி உண்ணுவது, உரையாடுவது, உறங்குவது முதலிய எல்லாவற்றிலும் ஒன்றெனக் கலந்து கொண்டாலும், கொள்வது கொடுப்பது ஆகியவற்றில் நம் பிறப்பு, வளர்ப்பு, 'சாதி', குலம் முதலிய மலக் குட்டைகளிலேயே குளித்துக் கொள்ள விரும்புகின்ருேமோ, அப்படியே ஆரியப் பார்ப்பனனும், தம் உடலில் ஓடிக்கொண்டிருக்கும் பிராமணக் குருதியில் சூடேறும் வரை நம்மைப் பூணூல் மேனியுடனேயே கட்டித் தழுவிக்கொள்கின்ருன்; ஒட்டி

உறவாடுகின்றான். ஆனால் அவன் உட்கனப்பு அவியாத தீ! ஈரம் உல ராத களிமண்! மனுநெறி மறவாத நெஞ்சம்! எனவே அவனுடைய பகையுணர்வு என்றும் நம் எதிரிலேயே நின்றுகொண்டுள்ளது சீன னைப்போல. ஒருகால் நாம் அமைந்துள்ள பொழுது அவனும் அமைந் துள்ளவன்போலக் காட்டிக்கொண்டாலும், நாம் கைதூக்கு முன்பே அவன் அடித்துவிடும் மனவுணர்வில்தான் இன்றும் உள்ளான்; என் றும் இருப்பான் என்பதை உண்மைத் தமிழன் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டும். ஏனெனில் அவன் தெளிவான நம் புறப் பகை!

இனி, நம் அகப்பகையாக என்றென்றும் இருந்து வருகின்ற வீடணப், பிரகலாத, பக்தவத்சல, சுப்பிரமணியன்களைப் பற்றியும் நாம் என்றும் எச்சரிக்கையாக இருக்கவேண்டி இருக்கின்றது. இவர் கள் இனத்தால் தமிழரே எனினும் மனத்தால் ஆரியரே! இவர்கள் குடுமி வைத்துக் கொள்ளாத—பூணூல் அணியாத (ஒருவேளை அணிந் திருக்கின்றரோ, நமக்குத் தெரியாது) பார்ப்பனர்கள். இவர்களுக்கு எனறைக்குமே எதிலுமே தம் தம் பெண்டு பிள்ளை நலன்களே குறி! அதன் பொருட்டு ஆரியப் பார்ப்பனர்க்குத் தொண்டு செய்து வாழ்வதே தம் நெறி. இத்தகையாரே நம்மைக் கடந்த மூவாயிரம், நான்காயிரம் ஆண்டுகளாக ஆரியப் பார்ப்பனருக்குக் காட்டிக்கொடுத்துக் கொண்டி ருப்பவர்கள்! இவர்களைப் பொறுத்தமட்டில் தமிழர்கள் மிக மிக எச் சரிக்கையாகவே இருத்தல் வேண்டும். நாம் கடந்த தேர்தல் காலங்களி லெல்லாம் பேராயக்கட்சியைப் பற்றிப் பேசிய விடங்களில் காமராச ரைத் தவிர்த்து இந்த வீடணப் பிறங்கடைப் பக்தவத்சல சுப்பிரமணி யன்களைத் தனியே பிரித்துப் பேசியதன் அகக்காரணத்தை இக்கால் அப் பேராயக் கட்சியிலுள்ளவர்களே உணருங்காலம் வந்து விட்டது. இத்தகைய தமிழ்ப்பகைவர் அரசியலில் மட்டுமன்றிக் கல்வித்துறை, ஆட்சித்துறை, தொழில்துறை முதலிய எத்துறைகளிலும் நீக்கமறக் கலந்து நிற்கின்றனர். இவர்கள் பேச்சும், ஓரளவு எழுத்தும், பெரும் பாலும் நடையும் தமிழர்க்காகவும், தமிழ்நாட்டவர்க்காகவும் அமை வது போலவே இருக்கும். ஆனால் இவர்கள் கொள்கைப்படி தமிழர் எனப் படுவோர் 80 விழுக்காடு பார்ப்பனரும், 15 விழுக்காடு இவரைபோன்ற வீடணத் தமிழரும், 5 விழுக்காடே உண்மைத் தமிழரும் ஆவார். இவர்கள் அமெரிக்காவிலோ, இங்கிலாந்திலோ போய்த் ''தமிழர்களைக் கண்டு உரையாடினர்'' என்ருலோ, ''தமிழப் பெண்களால் நெற்றி

யில் பொட்டிட்டு வரவேற்கப்பட்டனர்'' என்றாலோ, உண்மையாக அவர்கண்டு உரையாடியது பார்ப்பனர்களையே என்றும், அவர் நெற்றியில் பொட்டிட்டது அம்மாமிகளே என்றும் நாம் பொருள்செய்து கொள்ளுதல் வேண்டும். இராசாசியைத் தமிழ்க்குல முதியவராகவும், சங்கராச்சாரியைத் தமிழின முனிவராகவும் இவரனையர் கொண்டு பெருமை பாராட்டுவதும், பாதங்களைக் கழுவித் தண்ணீர் குடிப்பதும் உண்மையான தமிழன் எவனுக்கும் வராத மானமிழப்புச் செயல்களாகும்.

இத்தகைய அகப்பகையும் புறப்பகையும் உண்மைத் தமிழர்க்கு என்றும் இருப்பதால், தமிழின முன்னேற்றம் ஆயிரமாயிரம் ஆண்டுகளாகக் கைவராத ஒரு கவின் கலையாகவே இருந்து வருவது வருந்தற்குரியதும் உணர்ந்து திருந்தற்குரியதுமான ஓர் உண்மையாகும். தமிழர்க்குள் இன உணர்வை உண்டுபண்ண ஏதேனும் முயற்சி செய்தாலும், அல்லது தமிழ் மொழியை அதன் தாழ்ச்சி யழுக்கங்களினின்று விடுவிக்க முயன்றாலும் இவ்வகப் பகையும், புறப்பகையும் நம்மைத் தலையெடுக்க வொட்டாது தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சிகளே நம் வரலாற்றிலும் இலக்கியங்களிலும், ஆரிய 'இதிகாசங்'களிலும், 'புராணங்'களிலும் பெரும்பகுதியாகும். நாம் தலையெடுத்ததும், தலைகவிழ்ந்ததும் ஆரிய நூல்களில் தேவ–அசுரப் போர்களாக எழுதிவைக்கப்பட்டிருக்கும்; தமிழ் இலக்கியங்களில் தமிழ–வடவர் எழுச்சி வீழ்ச்சிகளாகப்பாடி வைக்கப்பட்டிருக்கும். ஆரிய நூல்களில் காணப்பெறும் முனிவரும், அரசரும், ஆடவர் பெண்டிரும் ஆரிய மதர்ப்பு மிக்கவர்களாகத் தோன்றுகின்ற அதே வேளையில், தமிழ் இலக்கியங்களில் உள்ள அரசரும், துறவியரும், ஆடவர் பெண்டிரும் ஆரியர்க்கு அடிமைகளாகவே நூற்றுக்குத் தொண்ணூறு விழுக்காடு படைக்கப் பெற்றுள்ளனர். காரணம் கடைக் கழகக் காலத்திலேயே புலவர்களும், அரசர்களும் தொண்ணூறு விழுக்காடு ஆரிய அடிவருடிகளாகவே இருந்துள்ளனர். அவர்கள் அழுத்தி வைக்கப்பெற்ற ஆரியச் சேற்றிலிருந்து தமிழர்களால் இன்னும் தங்கள் இனத்தையும் மொழியையும் மீட்டுக்கொள்ள முடியவில்லை என்றால், அவர்கள் எவ்வளவு ஆழத்தில் இவ்வினம் புதைக்கப்படுமாறு துணைநின்றனர் என்பதைக் கண்டு கொள்ளுங்கள். இன்றுள்ள தமிழர் கையாள்கின்ற சமயங்கள், சாதிகள், பழக்க வழக்கங்களுள் பெரும்பாலன ஆரியருடையனவே! பிற்காலச் சமய நூல்களிலன்றிக் கழகக் காலத்துள்ள நூல்களில், தமிழன் சமயத்தலைகளுள் இவ்வளவு கட்டுண்

டிருந்தான் என்பதற்கு எவரேனும் ஒரு சான்று காட்ட முடியுமா? இறைக்கொள்கை இருந்தது; முழுமுதல் மெய்ப்பொருளைத் தமிழன் என்றும் மறுக்கவில்லை. ஆனால் அதன் அடிப்படையில் இற்றைத் தமிழன்போல் பல்லாயிரக்கணக்கான சமயப் பூசல்களை உண்டுபண்ணிக் கொண்டிருந்தான் என்று எவரேனும் கூறுதல் முடியுமா? இவற்றை ஈண்டு எதற்குக் குறிப்பிட நேர்ந்தது என்றால், தமிழன் எத்துறையில் விழிப்பற்றிருந்தானோ, ஆரியன் அத்துறையில் விழிப்போடிருந்தான்; தமிழன் எங்கெங்கு தூங்கத் தலைப்பட்டானோ, அங்கங்கெல்லாம் ஆரியன் விழித்துக் கொண்டிருந்தான். தமிழன் எவ்வெவரைப் பகைவர்களாகக் கருதினானோ அவரவர்களையெல்லாம் ஆரியன் நண்பர்களாகக் கருதி வந்துள்ளான். தமிழன் எதில்எதிலெல்லாம் தன் பகுத்தறிவையும் தன்மானவுணர்வையும் இழந்துவந்தானோ அதிலதிலெல்லாம் ஆரியன் தன் அறிவையும், மானவுணர்வையும் செலுத்தத் தொடங்கினான். இந்த நிலை அன்றிலிருந்து இன்றுவரை தொடர்ந்து வந்துள்ளது; இனியும் தொடரவிருக்கின்றது. தமிழினம் இப்படியே தூங்கிக் கொண்டும், ஏங்கிக் கொண்டும், வீங்கிக்கொண்டுமே இருந்தால், ஆரியவினம் இப்படியே நம் உள்ளுயிரை வாங்கிக் கொண்டும், ஓங்கிக்கொண்டுமே இருக்குமென்பதில் துளியும் ஐயம் இல்லை.

இவ்வுண்மைகளின் அடிப்படையில் எழுந்த சலசலப்புகள் தாம் அண்மையில் தமிழக அரசின்மேல் ஆரியர்கள் சாட்டிய குற்றச்சாட்டுகள்.

இக்கால் தமிழக அதிகாரத்தையும் ஆட்சியையும் அரசியல் அமைப்புப்படி கைப்பற்றியிருக்கும் திராவிட முன்னேற்றக் கழகம் நாம் கூறிவந்த, வருகின்ற சில உயர்நிலை அரசியல் அமைப்பின்படி நடக்க முற்படவில்லையாயினும், இதன்முன்னிருந்த பேராயக் கட்சியின் அரசியல் ஆட்சிமுறைக்கு எவ்வகையிலும் தாழ்ந்து போய்விடவில்லை என்பது நாம் இவ்வீராண்டுக் காலமாகப் பொறுத்திருந்து கண்ட ஓர் உண்மையாகும். இவ்வீராண்டுக் காலத்தில் இது செய்த அரசியல் திறம்பாடுகளோ, பொருளியல் முன்னேற்ற அடிப்படைகளோ பெரும்பாலும் நம் தமிழ்நாட்டிற்குத் தேவையான அளவில் இல்லை என்றாலும், இது செய்திருக்கின்ற குமுகாயப் புரட்சிக்கு நாம் இதனைப் பாராட்டியே ஆதல் வேண்டும். சென்னைப் பகுதிகளின் பெயர்களைத் தூய தமிழ் வடிவங்களாக மாற்றியது, 'மதருஜ்' என்ற தெலுங்கச் சொல்லினின்று திரிந்து வழங்கிய 'மெட்ருஸ்' (Madras) என்ற ஆங்கிலச் சொற்பெயர் இத்தமிழ்நாட்டுக்குரிய பெயராக வழக்கிலும் சட்டத்திலும் ஆளப்பட்டு வந்ததை அடியோடு தகர்த்

துத் 'தமிழ்நாடு' என்ற உரிமை வழக்குப் பெயரைச் சூட்டியது, ஆரியப் புரோகிதன் வேள்விநடத்திய திருமணங்களே செல்லும் என்ற மனுநெறிவழி இந்தியச் சட்ட அமைப்பை அசைத்து, தமிழ் நெறி முறையில் நடைபெறும் திருத்தத் திருமணங்களும் செல்லும் என்று சட்டமாக்கியது, சாதிகுல முறையொழிப்பின் முதல் முனைப் பாகக் கலப்புத் திருமணங்களை ஊக்கியது, அரசினர் அலுவலகங்கள் எங்கும் தமிழ்மணங் கமழச்செய்தது, அலுவலக அதிகாரிகளில் பார்ப்பனராயிருந்தவர்களின் கொட்டம் ஒடுங்குமாறு அவர்களை மாற்றியும் இறக்கியும் நீக்கியும், அவ்விடங்களில் தமிழர் நலம் நாடும் அதிகாரிகளை அமர்த்தியும் தமிழர் நலம் பேணியது, உலகத் தமிழ் மாநாடு நடத்தி உலகிற்குத் தமிழின் ஏற்றம் உரைத்தது. உணவுப் பொருள் முடக்கும் குமுகாய முதலைகளின் வாயடக்கி வயிறு கிழித்து உள்ளொளித்த பன்னூறுயிரம் மூட்டைகளை வெளிக்குக் கொணர்ந்தது, இந்தி யெதிர்ப்புக் கொள்கையை விடாப்பிடியாகத் தலைமேற் கொணர்ந்த தில்லியரசின் கழுத்துநரம்பு தெறித்து விழுமாறு தடுத்து நிறுத்தித் தமிழர்தம் தன்மானம் தலைநிறுத்தியது, மாணவர் பயிற்சிப்படையில் பத்தே பத்து கட்டளைச்சொற்களாயினும் அவை இந்தியில் இருந்தால் அந்தப் படையே தேவையில்லை எனறு அற்றைப் பாண்டியனின் நெற்றுக்குரல் ஒலித்து நடுவணரசின் செருக்குக் கொள்கையை எற்றித்தள்ளியது, இன்னோரன்ன இன்னும் விளம்பப்படாதனவும், வெளியிடக் கூடாதனவுமான தமிழ், தமிழர், தமிழ்நாட்டின் நலந்தேடு செயல்களையும் உணரின், இவ்வாட்சி பேராயக் கட்சியின் ஆட்சிக்கு நூறுபங்கு மேல் என்றே குரலோங்கிக் கூற வேண்டியுள்ளது. இவையன்றி இது செய்திருக்கின்ற சில துணிவான செயல்களைக் கொண்டு, இனிச் செய்யவிருக்கின்ற செயல்களிலும் நம்பிக்கை வைப்பதில் தவறில்லை என்றே கருதவேண்டி உள்ளது.

இனி, இவற்றிற்கெல்லாம் முடிவைத்தாற்போல், கல்வி நிலையில் *நம் தமிழக அரசு செய்த சில நற்செயல்களும் உண்டு. அவற்றுள் இந்த ஆண்டு பள்ளி இறுதித்தேர்வுக்காக வைக்கப் பெற்றுள்ள தமிழ்ப்பாட நூலின் அமைப்பும், அந்நூற் கட்டுரை வரிசையுள் முதலாம் பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ள தனித்தமிழ்த் தலைவர் திரு. மறைமலையடிகளின் தமிழ்த்தாய் என்ற கட்டுரையுமாகும். இக்கட்டுரையில் பயிலப்பெற்ற கருத்துரைகளுக்காகவும், பன்னிரண்டுமுறை பயின்றுள்ள 'ஆரியம்' என்ற சொல்லுக்காகவும் பார்ப்பனர் ஆடிய ஆட்டமும், குதித்த குதியும், கொதித்த கொதியும், கரைத்த கரைவும், கத்*

திய கத்தலும், எழுதிய எழுத்தும்...... அடடா! தமிழர்க்குத்தாம் எத்துணையளவு தன்மானத்தீயை எழுப்பி விட்டன! இவற்றையெல்லாம் கண்டுங் காணாது போலிருந்து உடலை அலப்பிக்கொள்ளாமல் வாளாவிருந்து தமிழக அரசு எத்துணைப்பெரிய வெற்றிமாலையைச் சூட்டிக்கொண்டது! அடிகளார் எழுதிய 'தமிழ்த்தாய் கட்டுரைகூட கொஞ்சம் தண்ணென்றிருந்தது! அடிகளாரின் பனிபோன்ற குளிர்மையான செந்தமிழ்ச் சொற்களே இவ்வாரியப் பார்ப்பனர்களை இத்துணை அளவில் சூடேற்றுமானால், 'தெனமொழி' ஆசிரிய வுரைகளில் பயிலப் பெறும் சொல் நெருப்புத் துண்டங்கள் அவர்களை எவ்வளவு கொதிப் பேற்றுமோ, நாம் அறியோம்? ஆனால் ஒன்றை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். ஆரியப் பார்ப்பனர்களின் ஒவ்வோரெழுச்சியும் தமிழரில் ஓராயிரம் பேர்களைத் தன்மான வுணர்வுடையவர்களாக்கும் ஆற்றலுடையது. ஆரியன் குருதிச்சூடே அவ்வளவில் தோன்றுமானால் தமிழன் குருதிச்சூடு அளவுமானியை உடைக்குந்தன்மையது என்பதை ஆரிய இனத்துளார் ஒவ்வொருவரும் நினைவில் வைத்துக்கொள்ளுதல் வேண்டும். ஆரியர்தம் உள்ளழும்புகளை யெல்லாம் பிதுக்கிக் காட்டி அவற்றில் உள்ள சீழ்களையெல்லாம் வெளிப்படுத்தும் நேரம் வந்துவிட்டது என்பதை அவர்களும் அவர்களுக்குத் துணைபோகும் சுப்பிரமணியப் பிரகலாதன்களும் உணர்ந்து கொள்ளுவாராக.

திரு, திருவாட்டி என்ற சொற்கள்தாம் இனிப் பயிலப்பெறுதல் வேண்டும் என்று அரசு கட்டளையிட்டிருந்தும், சென்னைத் தினமணிப் பார்ப்பனர் 'ஸ்ரீ' என்ற சொல்லை இன்னும் விடாப்பிடியாக எழுதி வருவதுபோன்ற ஆரியப் பிடிகளைத் தளர்த்திக், குமுகாய, மொழி, நாட்டு அமைப்பில் அவர்கள் தம் இன, சாதிப் பூசல்களை அறவே கையை விட்டுத் தமிழர்களுடன் ஒரு பொதுமை உணர்வைக் கைக்கொண்டு வாழ்ந்தாலொழிய, இனித் தமிழகத்தில் அவர்கள் அமைதியையே காணமுடியாத ஒருநிலை வளர்ந்துவிடும் என்று எச்சரிக்கின்றோம். (மதுரையினின்று வெளிவரும் தினமணி மட்டும் மதுரைத் தியாகராசர் கல்லூரி மாணவர்கள் தலையீட்டின்பின் 'ஸ்ரீ'யைத் தவிர்த்துத் 'திரு' வையே வாழவைத்துள்ளது. சென்னைக் கல்லூரி மாணவர்கள் இது பற்றி வாளாவிருப்பதால் ஒருவேளை சென்னைத் தினமணி 'ஸ்ரீ'யை சிரிக்கவைத்திருக்கலாம்.)

இனி, தமிழக அரசு அண்மையில் வெளியிட்ட ''தெய்வப்பட நீக்கச் சுற்றறிக்கை'' ஆரியர், ஆரியத்தமிழர் ஆகிய இரண்டு திறத்

தாரிடமும் எழுச்சியை ஊட்டியுள்ளது. சமய வெறியில் ஆரியத் தமிழரும் ஆரியரும் ஒரே ஆற்றில் ஊற்றுப் பறித்தவரே ஆவர். இவ்வொரு வழி கொண்டே ஆரிய மாயையினின்று தமிழர் இன்னும் விடுபட முடியவில்லை. இறைக்கொள்கையை வீடு, வாசல், முற்றம், தெரு, காய்கறிக்கடை, அலுவலகம், எல்லா இடங்களிலும் இழுத்துக் கொண்டு திரிந்தால்தான் வீடுபேறு எளிதில் கிடைக்குமோ? மலந் தின்னும் பன்றி, சேற்றில் புரளும் எருமை, மூட்டை சுமக்கும் கழுதை, பிணந்தின்னும் கழுகு, உடலைக்கொந்தும் புழு முதலிய எல்லாவகை உயிர்களிடையிலும வேற்றுமையிலாது விளங்கும் இறைப்பேரருள் அலுவலகங்களில படைப்படைப்பு செய்யாது போனால் அவனை வீட்டுலகினின்று தலைகுப்புறத் தள்ளிவிட்டு விடுமோ? எல்லாம் வல்ல மெய்ப்பொருளின் உண்மை உணராத போலிக் கடவுள் கொள்கையரே இத்தகைய குமுகாயத் திருத்தக் கொள்கைக்கு எதிர்ப்புக் காட்டுவர். உண்மைத்தமிழர் ஒன்றை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். தமிழில் எப்படி வடமொழிக் கலபபு ஏறபட்டு எவ்வாறு மெய்ம்மைத் தமிழையும் அதன எழிலையும் தமிழன காணமுடியாது போயிற்றோ, தமிழ் நாகரிகத்திலும பண்பாட்டிலும எப்படி ஆரியக் கலப்பேற்பட்டு மெய்ம்மைத் தமிழ்ப் பண்பாட்டையும், நாகரிகத்தையும அவற்றின் சிறப்புகளையும தமிழன அறியமுடியாமற போயிற்றோ, அவ்வாறே தமிழரின் இறைக்கொள்கை-கடவுட் கொள்கையிலும் ஆரியக் கொள்கை கலப்புற்றுச் சமய ஆரவாரங்களை உண்டாக்கிவிட்டது என்பது மறுக்கவியலாத உண்மை. காலமும் இடமும் வாய்க்குமபொழுது இவை பற்றியும அழுத்தமாகவும் திருத்தமாகவும் பேசுவோம்.

ஈண்டு இவ்வுண்மைகளால் புலப்படுத்த வந்தவை இரண்டு. ''தமிழ்த்தாய்'க் கட்டுரை எதிர்ப்பு ஆரியப் பகைவர்களை மட்டும் கொதித்தெழச் செய்வானேன்? ''தமிழக அரசின தெய்வப்பட நீக்கக் கொள்கை'' ஆரியப் பகைவர்களையும், வீடணத்தமிழரையும் கொதித்தெழச் செய்வானேன்? இவ்விரண்டு கேள்விகளுக்கான விடைகளில் தாம் தமிழனின் உண்மையான தன்மானம புதைக்கப்பட்டுக் கிடக்கின்றது. அவன் வரலாறு மறைந்து கிடக்கின்றது. உண்மையான தமிழக மறுமலர்ச்சிக்குப் பாடுபடும் தமிழன் ஒவ்வொருவனும் எண்ணி, ஆராய்ந்து, தெளிய வேண்டிய உண்மைகள் இக்கேள்விகளிலேயே இருப்பதால், அக்கட்டுரை பற்றியும், இப்படநீக்கக் கொள்கை பற்றியும் நாம் விரிவாகப் பேசவில்லை. ஆனால் இவ்விரண்டு கொள்கைகளின் அடிப்படையில் தமிழக அரசு தான் எண்ணியதைச் செய்தே தீரவேண்டும் என்றும், எவர்க்கும், எதற்கும் இனி அஞ்சவேண்டுவதில்லை என்றும், தமிழனின் உள்ளுயிர்ப்பும், தமிழக மறுமலர்ச்சியும் மிக அண்மையிலேயே தோன்ற விருக்கின்றன என்றும் அழுத்தமாகக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

-பெருஞ்சித்திரன்.



மக்களவை

'தமிழ்த்தாய்' கட்டுரையில் என்ன தவறு?

"தமிழ்த்தாய்" என்ற கட்டுரை மறைமலையடிகளாரால் தனிச் சிறு நூலாக 1921-ஆம் ஆண்டுக்கு முன் எழுதி வெளியிடப்பெற்றது. அது 1921-ஆம் ஆண்டில் அடிகளார் வெளியிட்ட "அறிவுரைக் கொத்து" என்ற கட்டுரைத் தொகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளது. அத் தொகுப்பில் 13 கட்டுரைகள் அடங்கியுள்ளன. பின் 1931-ஆம் ஆண்டில் மேலும் 5 கட்டுரைகளைச் சேர்த்து "அறிவுரைக் கொத்து" இரண்டாம் பதிப்பினை வெளியிட்டுள்ளார்கள்.

1937-ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழக (இண்டர்மீடியட்) இடைநிலைத் தேர்வுக்குப் பாடமாக 1934இல் பல்கலைக்கழகக் கல்விக் குழுவினரால் "அறிவுரைக் கொத்து" வைக்கப் பெற்றது. அந்தக் குழுவிலே திரு. டி. சிவராமசேது எம். ஏ., பி. எல்., அவர்கள் தலைவராகவும், பர். உ. வே. சாமிநாதர் அவர்களும் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் எசு. அனவரதவிநாயகம் அவர்களும் உறுப்பினர்களாகவும் இருந்தனர். அந்த நூலில் "தமிழ்த்தாய்" 10-ஆவது கட்டுரையாகவும், "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்" 14-ஆவது கட்டுரையாகவும் உள்ளன.

1935-ஆம் ஆண்டில் இடைநிலை வகுப்பு மாணவர்கள் அறிவுரைக் கொத்தை வாங்கியபோது அதன்கண் உள்ள "தமிழ் நாட்டவரும் மேல் நாட்டவரும்" என்ற கட்டுரையில் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரைத் தாக்குவதான குறிப்புகள் இருப்பதாகவும் அறிவுரைக் கொத்தைப் பாடமாக வைக்கக் கூடாதென்றும் அதனை நீக்க வேண்டுமென்றும் ஒரு குறிப்பிட்ட வகுப்பினரும், அவர்கட்குச் சார்பான இதழ்களும் கிளர்ச்சி செய்தனர். அக் கிளர்ச்சிக்கு மிகவும் மும்முரமாக எதிர்ப்பு ஏற்பட்டது. அதன்பின் பல்கலைக் கழகத்தினர் அறிவுரைக் கொத்தை அப்படியே பாடமாக நடத்தலாம் என்று முடிவு செய்து விட்டனர். "தமிழ்த் தாய்" என்ற கட்டுரை அதே அறிவுரைக் கொத்

திலே உள்ளதுதான். அப்போது தமிழ்த்தாய் என்ற கட்டுரையி லுள்ள குறிப்புகளைப் பற்றிக் கிளர்ச்சியோ எதிர்ப்போ கிடையா. ஆனால் இப்போது அந்தக் கட்டுரை பற்றிய கிளர்ச்சிக்குக் காரணம் யாதோ?

"தமிழ்த் தாய்" என்ற கட்டுரை எழுதிய காலத்திலே "தமிழ் மொழி" முதன் மொழியாக இல்லை. தமிழர்களே தமிழைப் புறக் கணித்து வந்த காலம். வடமொழிக் கலப்பில்லாமல் தமிழ் தனித்து இயங்கும் ஆற்றலில்லாத மொழி என்று பேசிய காலம். தமிழைச் 'சூத்திரமொழி' யென்றும் வடமொழியைத் 'தேவ மொழி' யென்றும் வாய் கூசாமல் ஒரு சிலர் பேசிவந்த காலம்.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகிய மூன்று மொழிகளையும் துறைபோகக் கற்ற மறைத்திரு மறைமலையடிகளார் தமிழர்கட்கு எச்சரிக்கையூட்டும் வகையில் "தமிழ்த் தாய்" என்ற கட்டுரையினை எழுதினார்கள். அதில் தவறு ஒன்றும் இருப்பதாக இல்லை. தமைத் தமிழர் என்று கருதுபவர்களுக்கு அக் கட்டுரைமீது வெறுப்பும் சின மும் ஏற்படுமா?

தத்தம் தாயினிடம் ஒருவர்க்கு அன்புண்டாவது யாண்டும் நிகழ்ந்துவரும் மாற்றமுடியாத மறுக்க முடியாத இயற்கையேயாகும். அதுபோல் அவரவர் வாழும் வீட்டில் பற்று வைப்பதும் இயற்கையே யாகும். ஒருவரை யொருவர் இனப்படுத்தி அழைப்பது அவரவர் தாய் மொழியினைக் கொண்டேயாம். பன்மொழிப் புலவர்களும் தம் தாய் மொழிப் பற்றும் அம்மொழி வளமும் புலமையும் பெருகப் பணி புரிந்தே வாழ்கின்றனர். தமிழ் நாட்டில் அதற்கு மாறுகத் தமிழைச் சிறிதுங் கற்காது புறக்கணித்து ஆங்கிலத்தைப் பெரிதுங் கற்றுச் சிலர் பெருமை பேசி வந்ததைக் கண்டு உளம் நொந்த அடி கள் உண்மை உணர்த்தினர். எனவே, எக்காரணம் பற்றியும் இப் பாடத்தையோ இதன் எப்பகுதியையோ நீக்குதல் வேண்டாவெனத் தமிழக அரசினரைக் கேட்டுக் கொள்கிறோம்.

சென்னை
24—7—68 } தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தார்.

தகைமைசால் தண்டமிழ்க் காவல!

✦ தவத்திரு-மறைமலையடிகளாரால் எழுதப்பட்ட "தமிழ்த் தாய்" என்ற பாடம் ஒவ்வாத கருத்துகளடங்கியது என்றும், இதனால் பிற

மொழிவிருப்பம் மாணுக்கர்களுக்குக்குறையுமென்றும் சில ஆரியப்புழுக்களும், பார்ப்பன அடிவருடிகளான-போலித் தமிழர்களான உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் சிலரும் சேர்ந்து இப்பாடத்தை நீக்கு மாறு அரசினர்க்கு வேண்டுகோள் விடுத்துள்ளனர். இவ்வாருன எதிர்ப்பு நமதருமைத் தமிழ்த் தாய்க்கு ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளாகப் பல கோணங்களில் பல உருவில் வந்து கொண்டுதான் உள்ளது.

தமிழ் மொழியின் இயற்கைத் தன்மையையும், அதன் பண்டைய பெருமையையும் தெளிவுபடுத்தி, அதனோடு இணையாகத் தோன்றிய உலகப் பெருமொழிகளான ஆரியம், கிரேக்கு, இலத்தீன், ஈபுரு, அராபி, சீனம் முதலான பலதேய மொழிகளெல்லாம் இவ்வமையம் வழக்கிழந்த நிலையில் இருக்க, நமது தாய்மொழியாம் தமிழ்மொழி மட்டும் அன்று தொட்டு இன்றுவரை பண்டைய இலக்கண வரம்பிற்குட்பட்டு உயிருள்ள மொழியாக மேன்மேலும் வளர்ந்து வருகின்ற தன்மையை விளக்கிக்கூறி, இம்மொழி மட்டும் இவ்வாற்ருன் வளர்தற்குரிய காரணியத்தை அறிவியல் முறைப்படி அடிப்படை உண்மைகளைக்கூறி நிறுவிக்காட்டி, ஆரியம், ஆங்கிலம் ஆகிய மொழி ஒலியமைப்புகள் தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நமக்கு எளிமையானவை அல்ல. அம்மொழிகளை ஒலிக்கும்போது நமக்கு முயற்சி மிகுதியாகத் தேவைப்படுகின்றது; அதனுல் நமது உடலுறுப்புகள் வலிவிழக்கின்றன; ஆனுல் நமதருமைத் தாய்மொழியின் ஒலியமைப்பு எளிமையும் இனிமையும் கொண்டதாக இருப்பதால் முயற்சி குறைகிறது; இதனுல் தமிழ்மொழியைத் தாய்மொழியாய்க் கொண்டவர்கள் முதலில் தாய்மொழித் தெளிவு பெற்று மற்ற மொழிகளைப் பயின்ருல் விரைவில் அம்மொழிகளில் புலமைபெற்று நீண்டநாள் உயிர்வாழ ஏதுவாகும்; இதை விடுத்துத் தாய்மொழியை மறந்து மற்ற மொழியைப் பயில்பவர்கள் விரைவில் உயிரிழக்கின்ற நிலை ஏற்படுகின்றது என்ற பல கருத்துகளைப் பல சான்றுகளோடு எடுத்துக் காட்டியும், தெளிவு படுத்தியும் அடிகளார் அக் கட்டுரையில் கூறியுள்ளார்.

தமிழ் மொழியில் புலமை பெற்று ஆரியம், ஆங்கிலம் ஆகிய மொழிகளையும் கற்றுத் துறைபோய கன்னித்தமிழ்க் காவலரான அடிகளார் பலவகையிலும் பல மொழிகளை ஒப்பிட்டு ஆய்ந்து தமிழின் சிறப்புத் தன்மையை விளக்கிக் காட்டும் "தமிழ்த்தாய்" என்ற பாடத்

திற்கு எதிர்ப்புக்கூறி, அதை நீக்குமாறு அரசுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது ஓர் ஆரியக் கூட்டமென்றால், அதற்கு எத்துணை நெஞ்சுரம் இருக்க வேண்டுமென்பதை உண்மைத் தமிழ் நெஞ்சங்கள் எண்ணிப்பார்க்க வேண்டுகின்றேன்.

நமது தமிழகத்தே தமிழர்களால் நடத்தப்படும் தமிழக ஆட்சியில் தமிழ்ச் சிறப்பையும்–தமிழர்களின் பெருமையையும் எதிர்க்கின்ற கூட்டம் இங்குப் போலிப் போர்வையில் நடமாடுகிறதென்றால், அந் நடமாட்டத்தையும், அதனால் ஏற்படும் அச்சுறுத்தலையும் கண்டு ஏமாறுதற்குத் தமிழகத்தே உள்ள நான்குகோடித் தமிழர்களும் ஊமைகளா அல்லது, தமிழ்மறம் குன்றிய கோழைகளா?

–அன்பு. அண்ணாமலை, நத்தம், சோலையார்பேட்டை

† ...தேனின் இனிமை–பாலின் சுவை எவ்வாறு உலகறிந்த உண்மையோ! அவ்வாறே தமிழின் சுவையும்–இனிமையும்! பாலையோ, தேனையோ அருந்தாதவர் அவற்றின் சுவையறியார்! தமிழ்த்திரு. மறைமலையடிகளார் தமிழ்–ஆங்கிலம்–வடமொழி ஆகிய மூன்று மொழிகளிலும் புலமை பெற்றவர். எனவே, தமிழ் மற்ற மொழிகளை விடச் சுவை–இனிமை–எளிமை உடையது எனத் தம் வருங்கால இளைஞர் குழாத்திற்கு உணர்த்துகின்றார். அவ்வாறு உணர்த்துங்கால், வடமொழியின் தன்மை பற்றியும் குறிப்பிடுகின்றார். அதைக் கண்டு குமுறுகின்றன குறைகுடங்கள்! புலம்புகின்றன புல்லுருவிகள்; நொண்டியை நொண்டியென்று குறிப்பிட்டால் சினம் கொள்வதுபோல்! தமிழினத்தின் சார்பில் எச்சரிக்கின்றோம். விபீடண, பிரகலாதக் கூட்டத்தினர்க்கு இங்கு, இனி, வேலையில்லை. இஃது இருபதாம் நூற்றாண்டு! வேதக்காலமன்று. கதிரவனைக் காரிருள் மறைப்பது நீடிப்பதில்லை! தமிழகக் கல்வியமைச்சர் அவர்கள் புல்லுருவிகளுக்குச் சரியான பாடம் புகட்டுவார் என ஆவலுடன் எதிர்நோக்குகிறோம்.

–மு. இளம்பரிதி, செயலர், தொல்காப்பியர் மன்றம், உரத்தநாடு

† ... மற்றுக் கல்வி அமைச்சரும், மற்றைச் சுற்றமும் அப்பாடத்தை நீக்கவோ, ஒதுக்கவோ, பிடர்க்கண்ணர் அல்லர் என்னும்பெரு நம்பகம் உடையோம் எனினும் மொழியாசிரியக் கடப்பாட்டால் முன் மொழிந்தோம்; வேறன்று. பிறரும் தம் ஒப்பத்தை விரிவாய் விரைவாய்ச் செலுத்துவர்.

இங்ஙன்,

அடியார்க்குமங்கலம், திருவாரூர் அதிரை, பெளிப்பாளை யம், நாகை, மஞ்சக்கொல்லை, வெளிவை ஆகிய ஊர் உயர் நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் தமிழாசிரியன்மார் (இருபத்தெழுவர்).

அன்புடையீர்!

18-7-68 அன்று நடந்த முத்தமிழ்மன்றச் செயற்குழு கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம்:—

...தவத்திரு அடிகளார் அவர்கள் இக்கட்டுரை எழுதிய நோக்கம் மாணவர்களுக்குத் தாய்மொழிப்பற்றை உண்டாக்க வேண்டும்; அதன் பெருமையை உணர்த்த வேண்டும் என்பதேயன்றித்தலைமை ஆசிரியர்கள் கூறுவதைப்போலத் தமிழ் வெறியையோ, பிற மொழிகள் மீது வெறுப்பையோ ஏற்படுத்த வேண்டுமென்பதன்று. மேலும் சிறப்பாக, தாய்மொழியே பள்ளிகளில் பயிற்சி மொழியாக இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்துவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். இதுவே இன்றைய தமிழக அரசின்–பயிற்சிமொழி பற்றிய–கொள்கையுமாகும். எனவே எக்காரணத்தைக் கொண்டும் இக்கட்டுரையைப் பாடப்புத்தகத்திலிருந்து நீக்கவேண்டாமெனத் தமிழக அரசைக் கேட்டுக்கொள்கிறோம்.

–சீ. செயராமன், செயலாளர், முத்தமிழ்மன்றம், நெய்வேலி.

ஐயா, தமிழகத்துப் பள்ளி யிறுதி வகுப்புத் தமிழ்ப்பாட நூலில் சேர்க்கப்பட்டுள்ள மறைமலையடிகளின் கட்டுரைக்குச் சென்னை நகரத் தலைமையாசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளதையும், அதனை 'மெயில்', 'எக்சுபிரசு', 'சுதேசமித்திரன்' போன்ற பார்ப்பன இதழ்கள் பெரிது படுத்துவதையும், பேராயக் கட்சியினரின் நாளிதழான "நவசக்தி" அவ்வாசிரியர்கள் ஏதோ உண்மையைக் கண்டுபிடித்துக்கூறியது போன்ற எண்ணத்தில் செய்தி வெளியிட்டிருப்பதையும் கண்டபோது ஏற்பட்ட உணர்வில்-நெஞ்சக் குமுறலில்–இதனை எழுதுகின்றேன்.

உண்மையில் மறைமலையடிகளின் கட்டுரையை எதிர்த்துக் குரலெழுப்பியுள்ளவர்கள் யார்? அவர்களுள் பெரும்பாலோர் ஆரியப் பார்ப்பனர்கள் என்பது மிகத்தெளிவான உண்மையாகும்! எஞ்சிய சிலரோ ஆரிய அடிவருடிகளும், பார்ப்பனப் பாதந்தாங்கிகளும் வையாபுரிப் பிறங்கடையினரான தாய்க்கொல்லிகளுமாவர்!

கட்டுரையில் இவ்வாரியக் கும்பல் ஓலமிடுமாறு என்ன கூறப்பட்டுள்ளது?

"தமிழ்த்தாய்" என்ற தலைப்பில் தனித்தமிழில் எழுதப்பட்டுள்ள அக்கட்டுரை, நம் உயிர்க்கு உற்ற துணையாய் இருந்து உதவுவது தாய்மொழியாகிய தமிழ்மொழி ஒன்றே என்றும், வயிற்றுப் பிழைப்புக்காகவும் வேறுசில காரணங்களுக்காகவும் கற்கும் ஆங்கிலம் ஆரியம் முதலான மொழிகள் நமக்கு எப்போதும் உதவியுந் துணையுமாய் இருந்து பயன்படமாட்டா என்றும் கூறுகிறது,

தாய்மொழியைக் கைவிட்டு ஆங்கிலம் ஆரியம் முதலியவற்றையே கற்றுப் பழகும் நம் நாட்டவர் பலர் முப்பது அல்லது நாற்பது ஆண்டுக்குப் பலவகை நோய்களாற் பிடிக்கப்பட்டு மாய்ந்து போகின்றனர் என்பதைக் கரணியங்களோடும் எடுத்துக்காட்டுகளோடும் விளக்குகிறது.

தமிழின் தொன்மைச் சிறப்பை எடுத்துரைக்கிறது. மனோன்மணீயப் பாடலை எடுத்துக்காட்டி ஆரியம் முதலான மொழிகளெல்லாம் இறந்தொழியவும் தமிழ் மட்டும் இன்னும் இளமையோடு இருப்பதற்கான காரணங்களாக "இயல்பிற் பிறக்கும் இனிய ஒலிகளும் மிகப் பொருத்தமான இலக்கண முடிபுகளும், இயைந்து ஓதுதற்கு எளிதாய் இருத்தலுமே" எனக் காட்டுகளுடன விளக்குகிறது. தமிழிலக்கியங்களின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

இரண்டாயிரமாண்டுகட்கு முன்பிருந்தே தமிழின் சிறப்பை மறைத்தும், தமிழின் தனித்தன்மையை அழிக்க வடசொற்களைப் புகுத்தியும், தமிழிலக்கியங்களுள் பலவற்றை அழித்தும், சிலவற்றில் இடைச்செருகல்கள் செய்தும் வந்ததோடு இன்றும் பல தாளிகைகளிலும், நாளிதழ்களிலும் வானொலியிலும் வலிந்து வடசொற் புகுத்தி வரும் இக்கூட்டம்—உண்மையை மறைமலையடிகளின் எழுத்து வெள்ளிடைமலையென எடுத்துக் காட்டுவதையும், அடிகளின் அரிய கட்டுரையை இளந்தமிழ்த் தலைமுறை படிக்குமானால் ஏற்படக்கூடிய விளைவுகளையும் எண்ணிக் கலங்கிப் பிதற்றுவதில் வியப்பில்லையன்றோ?

இக்கட்டுரையில் "மறுக்கத்தக்கன"வும் "உண்மைக்கு மாறான" வையும் உள்ளன என்று அத் தலைமையாசிரியர்களுள் எவரேனும்

பொதுமேடையில் மொழியறிஞர் முன்னிலையில் மெய்ப்பிக்க முடியுமா? துணிவிருந்தால் மெய்ப்பிக்கலாமே!–அப்போதாகிலும், உண்மையைப் பொய்யாக்கிப் பொய்யை உண்மையாக்கித் திரியும் உலுத்தர்தம் முக மூடி அறவே கிழித்தெறியப்படுமல்லவா?

மறைமலையடிகளின் கட்டுரையை எதிர்க்கக்கிளப்பிய இக்கூட்டம் இதற்குமுன் வைக்கப்பட்ட பாடநூல்களில் குற்றங்கள் காணப்பட்ட போது எதிர்த்ததுண்டா?

1966-ஆம் ஆண்டு பள்ளியிறுதி வகுப்பு மாணவர்க்குப்பாடமாக வைக்கப்பட்ட இந்தி நூலில் காணப்பட்ட தமிழன் பண்புக்கு மாறான செய்திகளைக் காண்மின்:

* தமிழிலக்கியங்களுள் செம்மணியாம் சிலப்பதிகாரத்தில் சில காட்சிகள் நாடக வடிவில் இப் பாடநூலில் தரப்பட்டன. மனையாளின் சிலம்பை விலைகூற வந்த கோவலனைத் தன் இருப்பிடத்தே இருக்கச் செய்த பொற்கொல்லன் தன்பழி துடைத்துக்கொள்ளும் ஆவலுடன் ஓடி வருகிறான். அப்பொழுது பாண்டிய மன்னன் களியாட்டுக் கூட் டத்தில் காட்சி தருகிறான்! எப்படிப்பட்ட நிலையில்? மதுவுண்டு மயங் கிய நிலையில்! மன்னன் மதுக்கிண்ணமும் கையுமாக மதிமயங்கி ஆட் டக்காரியின் ஆட்டத்தில் ஈடுபட்டுக் கிடக்கின்றான். இடைப்பட்ட பொற்கொல்லன் மேலும் எரிந்து விழுகிறான்! காணாமற்போன சிலம்பு களோ இரண்டு! அகப்பட்டதொன்று தவிர மற்றொன்றையும் கேட்டு, மறுத்தால் கொன்று விடுங்கள் என்ற ஆணை விடுக்கின்றானும் பாண் டியன். தமிழனுக்கு வடவன் கற்றுத்தந்த இச் சிலப்பதிகாரத்தைக் கண்டு மெய்த்தமிழர் நெஞ்சம் பதைத்தபோது இத் தலைமை ஆசிரி யன்மார் 'மனுநீதி' படித்து மகிழ்ந்து மயங்கிக்கிடந்தனரா?

இற்றைத் தமிழக அரசு எவ்வகையிலும் பார்ப்பனரின் சலசலப் புக்கு அஞ்சாது செயலாற்றின் அவர்களின் சீரிய செம்மை சான்ற தொண்டிற்குத் தோள்கொடுக்க மெய்த்தமிழர் அனைவரும் அவர் பாங் கில் இருப்பர் என்றுரைத்துக் கொள்கின்றோம். அவ்வாறின்றி ஆரி யக் கும்பலின் போலிப்பாராட்டைப் பெற முனைந்து வேறுபட்டு நடப் பாராயின் இற்றைக்கு மொழிப்பற்றால் விழிப்புற்றிருக்கும் இளைஞர் குமுகாயத்திற்கு விடையிறுக்கும் துணிவு பெற்றிருக்கவேண்டுமென் பதை நினைவுறுத்துகின்றோம்!

–அ. தெ. தமிழநம்பி, அறங்கண்டநல்லூர்.

* "தென்மொழி" சுவடி 3 ஓலை 12 இல் புலவர் அரி. தென்னகன் மடல்

எழுத்தாளர் துயர்?

அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய நிறைதிரு: "தென்மொழி" ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம். "தென்மொழி" அன்பர்களுக்கு நான் புதிய எழுத்தாளன்; எனினும், கலைமகள், தினமணி, அமுதசுரபி, சுதேசமித்திரன், தாமரை மற்றும் பல இதழ்களில், என் சிறு கதைகளும், பாடல்களும், தொடர் கதைகளும் வெளியாகியுள்ளன. வானொலியில் என் நாடகமும், மெல்லிசைப் பாடல்களும் ஒலிபரப்பாகின்றன "புதுமைச்சித்தன்" என்ற பெயரில், கடந்த இருபதாண்டுகளாக எழுதி வருகிறேன். இரண்டு சிறுகதைத் தொகுதிகள் வெளியாகியுள்ளன.

தொழுநோயால் தாக்கப்பட்ட நான், வேலையை இழந்து உறுப்புக் குறைவுடன் மிகவும் துன்பப்படுகிறேன். வறுமையின் பிடியில் சிக்குண்டு வாழமுடியாமல் தவிக்கின்றேன். "புதுமைச்சித்தன் உதவி நிதி", என்பதை 'அமுதசுரபி' தொடங்கியுள்ளது. தென்மொழி; அன்பர்களும், தங்களால் இயன்ற நன்கொடைகளையும் பொருளுதவிகளையும் வழங்கி, எனக்குதவ வேண்டுமாகப் பணிவன்புடன் வேண்டுகிறேன். நோயுடனும், உறுப்புக் குறைவுடனும், வறுமையுடனும் துயரெய்தி நிற்குமொரு தமிழ் எழுத்தாளனைப் புரந்து உதவி, வாழ வைத்த பெருமையும், சிறப்பும் தென்மொழி அன்பர் பெருமக்களைச் சாரும். அன்புத் தமிழ்நெஞ்சம் படைத்த "தென்மொழி" அன்பர்கள் தாராளமாக உதவி, துயர்கொண்டு நிற்கும் என் வாழ்க்கையை வளப்படுத்துவார்களென்ற நம்பிக்கையுடன் இதனைமுடிக்கிறேன். வணக்கம்
–புதுமைச்சித்தன், அன்பு-தொண்டுநிலையம் பாரதபுரம்,செங்கற்பட்டு

(ஆசிரியர் குறிப்பு: அன்பர் "புதுமைச்சித்தன்" நல்ல கற்பனை வளம்பெற்ற சிறுகதை எழுத்தாளர்.அருவருப்பின்றி உண்மை உணர்வோடும், மொழிச் சிலிர்சிலிர்ப்போடும் அவர் எழுதும் சிறுகதைகளில் தனித்தமிழ் இல்லை யெனினும், நல்ல கலையாக்கம் உள்ளதைக் கண்டு பெரிதும் மகிழ்ந்திருக்கின்றேன். மக்கள் மனம் பண்பாடு எய்தி இக்கால உள்ள புலையுலகம் மாய்ந்து கலையுலகம் தோன்ற வேண்டும் என்ற ஆரா விருப்புள்ள இவ்வன்பர் தொழுநோயால் பெரிதும் ஊறு படுத்தப்பெற்று வாழ்க்கையில் துன்புற்று வருகின்றார். கலைநாட்டமும் தமிழ்ப்பற்றும் உள்ள அன்பர்களும், தமிழ்ச் செல்வர்களும் அவரின் இருள் மண்டிய வாழ்வில் ஒளியேற்றுவார்களாக. அவர்க்குத் துணைபுரியும் அன்பர்கள் தங்களைத் தென்மொழி யன்பர்களாக அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டுகின்றேன்.

–பெருஞ்சித்திரன்.)

இலக்கியம்

நூறாசிரியம்.

துரை-மாணிக்கம்.

பாட்டு: கச.

விரைவா கின்றே உலகம்! உலகத்துப்
புரையா கின்றே பொலிவுறு வாழ்வே!
மண்ணா கின்றே மனனே! மாண்பொடு
பொன்னா கின்றே பொய்யுடைப் போக்கே!
வறிதா கின்றே அறிவே! வாணாட்
குறியதர் தப்பின்று குடும்பெனும் பயனே!
முதியோர் முதுமை முகிழ்விறந் தன்றே!
இளையோர் இளமை எழில்குலைந் தன்றே!
பெண்டிர் பெண்மை பெட்பிறந் தன்றே!
ஆடவர் ஆண்மை அறக்குலைந் தன்றே!
அறங்கூ னின்று! பொருளர சாணையின்
மறந்தலை நிமிர்ந்தன்று; மாணிழிந் தன்றே!
மணஞ்செய் கோலத்து மாண்பிழந் தன்றே!
கணவர் மனைவியர் கட்டவிழ்ந் தன்றே!
அறிவியல் உடலிய லடியிழிந் தன்றே!
பொறியியல் மக்களின் பொறியரிந் தன்றே!
கான்படு விலங்கின் ஊன்வளர் முனைவே
மாண்பெறு மாந்தர்க்கு முயல்வா கின்றெனத்
தேரா வாழ்க்கை திறம்பலின்
ஆரா விருள்சேர் அழிநிலை நோக்கியே!

பொழிப்பு:-

சுழற்சி நிரம்பிய இம்மண்ணகத்துப் பொலிவு நிரம்பியிருந்த வாழ்வு உள்ளீடு குன்றித் திண்மை குன்றுவதாயிற்று; நிலைத்திருக்க வேண்டுவதாகிய உள்ளம் மண்போலும் குலைவுறலானது; பொக்கென வெறுமை நிரம்பிய பொய்ம்மைப் போக்கே பெருமை பெறுவதாகிப் பொன்போலும் மதிக்கத் தக்கதானது; அறிவு பயனற்றுப் போதலால் வறட்சியுற்றது. வாழ்நாளின் இலக்கை எய்தும் வழி தப்பியது, கூடி வாழும் பெரும் பயன்! முதுமை நிரம்பியவரின் மூப்பு அறிவு மலர்ச்சியற்றதாய்ப் போனது; இளையோரின் இளமை அழகு குலைவதாயிற்று; பெண்டிரின் பெண்மை வேட்கத்தக்க நிலையினின்று அழிந்தது; ஆடவரின் ஆளுமை நிலை முற்றும் குலைந்து போனது; அறம் கூனலுற்றது; பொருள் அரசு செய்து ஆணை புரிதலால் மறம் தலைநிமிர்ந்தது; மானம் தன் நிலையினின்று இழிந்தது; ஆணும் பெண்ணும் கூடித் தலைப்பெய்தும் மணவமைப்பின்கண் பெருமை இலவாகியது; கணவனும் மனைவியுமாகப் பொருந்தியவர்தம் பிணைப்பு தளர்வுறலாயிற்று; பூதவியல், வேதியியல்முதலிய அறியப்பெற்றசிதைவிலா உண்மைகள் யாவும், சிதைவுறும் மாந்த உடலின் காலடி நின்று இழிதலாயின; மாந்தன் தானே சமைத்துக்கொண்ட பொறிவினைப் பாடுகள் யாவும் இவன்றன் உடலிலுள்ள பொறி புலன்களை அரிந்தெடுத்து விலக்கலாயின. காட்டின்கண் தோன்றி மறையும் விலங்கினங்கள் தம் ஊன்பொதி உடம்புகளை வளர்த்துக் கொள்ளவே முனைந்து முயல்வனபோல், மாட்சிமை பெறும் மாந்தரின் மீமிசை வாழ்வும் அவ் வூன் முயற்சி ஒன்றே கொண்டு இயங்குதலாயிற்று;—என்றிவ்வாறு தேர்ந்து கொள்ளப் பெறாத வாழ்க்கை மாறுபடுதலுறின், விலக்கமுடியா இருள் பொருந்திய அழிவுநிலை நோக்கி விரைதல் ஆகின்றது இவ்வுலகம்.

விரிப்பு:

இப்பாடல் புறத்துறையைச் சார்ந்ததாகும்.

இவ்வுலகத்துக்கண் அறம் மயங்கி மறமோங்கி, பொருள் புரைந்து இருள் நிறைந்து, இன்பிழிந்து துன்பெழுந்து, மாந்தர் வாழ்வுறலின்றித் தாழ்வுறக் கிடக்குங் கீழ்நிலை நோக்கி, உலகியல் பொருண்முடிபு உணரக் கூறியதாகும் இப்பாட்டு.

'புரையாகின்றே பொலிவுறு வாழ்வு' என்ற விடத்து, வாழ்க்கை பொலிவு மிக்கது என உறுத்துக் கூறியும், 'குறியதர் தப்பின்று குடும்பெனும் பயனே' என்ற விடத்து 'வாழ்க்கைக் குறி தப்பிப் போகும் இவ்வுயிர்க்குழாம் மீளுமிடத்து நலம் பயக்குற விளங்கும்' என்று எடுத்துக் கூறியும், 'கான்படு விலங்கின் ஊன் வளர் முனேவே, மாண்பெறு மாந்தர்க்கு முயல்வா கின்று' என்ற விடத்து, 'நாடுபடு மாந்தரின் மீமிசைப்பேறு காடுபடு விலங்கின் ஊன்வாழ்விற் கிழிந்த முயல்வினின்று, மீட்கப் பெறின் மாட்சிமைப் பட்டு விளங்கலுறும்' என்று நிறுத்துக் கூறியும், இன்னும் பிறவழியும் உலகமுய்யக் கூறியதாகும் இப் பாட்டு.

விரைவு ஆகின்று உலகம்: உலகம் விரைந்து செல்லுதலை உடையது. இவ்வடியொடு பாட்டின் இறுதியடியாகிய 'ஆர விருள்சேர் அழிநிலை நோக்கியே' என்ற அடியினைக் கொண்டு கூட்டிப் பொருள் முடிக்க. உலகம் அழிவுநிலை நோக்கி விரைந்து செல்கின்றது. ஈண்டு 'உலகம்' ஆகுபெயராக உலகத்துள்ள எண்ணுயிரங்கோடி உயிர்களையும், அவற்றுள் மேம்பட்டு நிற்கும் மக்களையும், அவர் தம் பெருநிலை வாழ்வையும் குறித்தது என்க. 'ஏ' அசை. உறுதிப் பொருளில் வந்தது.

உலகத்துப் புரையாகின்று பொலிவுறு வாழ்வு: *புரையாகின்றமை நோக்கி உலக வாழ்வு முன்பு திண்மை மிக்கதாக விருந்தமை* **உணரப்பெற்றது. புரைதல்-உள்ளீடு குறைந்து பொள்ளென்றுதல் பொள்ளுதல்-தொளையுடையதாயிருத்தல். புள்-பொள் + து-பொத்து-பொந்து = தொளை**

புள்-புளை-புழை-புரை = உள்ளீடறுதல்.

பொலிவுறு வாழ்வு *என்று கருத்துப் பொருளைக் காட்சிப் பொருளாக்கியது, தோற்றமே வேண்டாததொன்றாகலின் அதனுள் துலங்குதலும் அறவே வேண்டாததொன்றும் என வலியுறுத்துவான் வேண்டி. என்னை? தோற்றத்திற்கும் பயனுக்கும் வேறுபாடில்லையோ எனின், உண்டு; அவ்வகை வேறுபாடுற்ற பொருள் எட்டிபோல் துய்ப்பதற்காகாதென்க. இனி பலாப்போல் துய்ப்புப் பொருள்களிலும் வேறுபாடு தோன்றுவதென்னை எனின், அஃதொன்றே அத் துய்ப்புப் பொருளுக்கு அரணு நின்றது கண்டு கொள்க. அஃது எட்டித்தோற்றம் போல் வேட்பித்து ஊறுபடுத்தாது, வேட்பியாது நலம்பயப்பதாகி*

யதை உய்த்துணர்க. இனி, வேட்பியாத தோற்றம் நலம் பயக்குமாறு போல் காட்சியளவானே பொலிவு குன்றிய உலகு நலம் பயவாது போவதேன் எனின், பொலிவு என்பது மருள் நீங்கிய மாசறு காட்சிக் குரியதாகலின், அத்தகையோர்க்குத் தோன்றுவதே அன்றி, இருள் தேங்கிய இழிவுறு காட்சியோர்க்குத் தோன்றுவதே ஈண்டுக் குறிக்கப் பெற்றதாம் என்க. இருண்ட அகக்கண் பெற்றார்க்குத் தோன்றும் பொலிவும், ஒள்ளியார்க்குத் தோன்றும் பொலிவும் வேறு வேறும் என்க. ஈண்டுப்புறத்தே பொலிவு நிரம்பியதாக இருளோரும், மருளோரும் காண்பதாகிய இவ்வுலக வாழ்க்கை, அகத்தே புரைபோட்டம் உள வாக அருளோரும், தெருளோரும் காண்பதற்குரியதாக உள்ளது என்பது வலியுறுத்தப் பெற்றது.

மண்ணுகின்றே மனனே!: நிலைகுலையாத மனம், நிலைகுலையும் மண்போலும் ஆகியது. மனம்-மன் என்னும் அடிநிலை கொண்டது. மன்-நிலைத்தல். நிலைத்தல் உடையதாகலின் 'மனம்' என்னும் பெயர் பெற்றது. என்னை? நிலையா வொன்றை நிலைத்தல் என்றது ஏன் எனில், அது நிலையா நிற்றல் கொண்டே நிலையாமை வாய்ந்தது எனக் கருதல் வேண்டாவென்பது குறித்தும், முயற்சியின் நிலைக்கும் திறன் வாய்ந்ததாகும் என்பது குறித்தும், உறுதிப் பொருளும், பண்பும் தோன்ற மனம் என்றனர் முந்துநூல் கண்ட முதுவோர். மெய்யறு தோற்றத்தை மெய் என்றாற் போலவோ எனில் அற்றன்று. உயிர் இவ்விடத்தே உறையுள் கொண்டது மெய்யே எனத் தேற்றலான் உடலை மெய் என்றனர். என்னை? காண்பொருளாகிய உடலின் வெளிப்பாடு கொண்டே காணுப்பொருளாகிய உயிரின் உண்மை உணரப்படுதலின் மெய் என்றனர், தூசறு உணர்வால் துலங்கத் தோற்றிய மாசறு காட்சியின் மதிமன நுண்ணியர். இனி, நிலைக்குரிய நன்றிதன் தன்மை; நிலைக்குரியதே என வலியுறுத்துவான் வேண்டி இப்பொருளின் மெய்த்தன்மை புலப்படுத்த மனம் என்றனர். மெய்-தனிப் பொருளன்று. உயிரொடும் பிறவொடும் கலந்த பல்பொருள் ஒருரு; பன்முல வெளிப்பாடு. எனவே கோ ஏறும் கழுதை கோவேறு கழுதை எனப் பெயர் பெற்றாற்போல், உயிர் இருப்பதை மெய்ப்பிக்கும் உடலை மெய்யெனப் போற்றியும் தேற்றியும் கூறினர் என்க.

இனி மனம் நிலைப்பாடுற வளர்தலே அதன் மீமிசை நிலையாதலின் அது நிலைகுலைதல் தாழ்வானமா ந்தநிலையாம் எனக்கண்டுகொள்க. மனம் மக்களிடையன்றிப் பிறவுயிர்களிடத்தும் மங்கித்தோன்றுதலுண்

மையின், மக்கள்பால் புலரத்தோன்றிய நிலையினின்று வளர்ச்சியுறு தலே மாந்தத் தோற்றத்தின் சிறப்பாம் என்க. இவ்வழிச் சிறப்பெய்த வேண்டிய மனம் மண்போல் நிலகுலைதலுற்றது என்க. மண் உலகத் தோற்றத்தின் முதல்; நாற்பூதங்கள் நிரம்பிய ஐந்தாவது பூதப்பொருள். அத்தகையதோர் ஐம்பூதப் பொருளாகிய உடலில் மனம் என்னும் நிலைப்புப் பொருள் நிலைத்திருக்க வில்லையானல், இம் மண்ணிற்கும் உடலிற்கும் வேறுபாடுதான் என்னையோ என்று உன்னுக.

மாண்பொடு பொன்னுகின்றே பொய்யுடைப் போக்கே!:

பொய்யுடைப் போக்கு மாண்புடையதாகவும், பொன்போல் மதிக்கப் பெறுவதாகவும் உளது. பொய்-பொள் (வெறுமை-உள்ளீடற்றது) என்னும் வேரடியாகப் பிறந்த சொல். பொன்-பொலம் மிக்கது. 'பொல்' என்னும் வேரடியாகப் பிறந்த சொல்லென்பதும், பயனும் முன்னரே குறிக்கப்பட்டன. மனம் நிலகுலைந்தபின் பொய் மாண்பென மதிக்கப்பெற்றது என்க.

வறிதாகின்றே அறிவே: மனம் நிலைகுலைந்து, பொக்குநிலை மதிக்கப் பெற்றபின் அறிவு வறிதாக மதிக்கப் பெறுகின்றது என்க. வறிது-வறள்-விளைவு இல்லது. வள்-வறு-வறுமை-வறட்சி-வறண்டது. வள்-வெள்-வெறு-வெறுமை. அறிவின் விளைவு ஒன்றுமில்லை என்க. விளைவு-பயன். அறிவு நிலம் போல்வதாயின் அதனைப் பயன் கொளுவா வழி வறண்டு கிடத்தலால் வறிதுநிலை எனப்பட்டது.

வாணுட்குறி அதர் தப்பின்று குடும்பெனும் பயன்: குடும்புநிலையால் எய்தப்பெறும் பயன் வாழ்நாளின் பெருநோக்கினை அடையப் பெறுதல். அவ்வழி தவறிற்றென்க. அதர்-வழி.

குடும்பு: கூடியுறைதல் நிலை. குடும்பு-குடும்பம். குல்-குடு-கூடு; குல்-குலு-குலவு-குழு-குழும்பு. குல்-கல் – கல – கலாவுதல்-கலத்தல் உயிர்கள் கூடியுறைதலால் ஏற்படும் பெரும்பயன், வாழ்வின் வழி தப்பலால் இலதாகின்றது. அதர் தப்பவே பயனும் தப்பிற்றென்க.

முதியோர் முதுமை முகிழ்விறந்தன்று: முதுமை-முற்றியநிலை. முதுமை உடல் வழித்தெனினும், அறிவும், மனமும் அதன்வழி முதிர்வுற்று முகிழ்ச்சியடைதல் இயல்பாயிற்றென்க. ஆயின் இக்கால் மன

மும், அறிவும் முகிழ்வின்றி உடல்மட்டும் முதுமையற்றது இழிநிலை என்க. முகிழ்விறந்தது-மலர்ச்சியுற்றது.

இளையோர் இளமை எழில் குலைந்தன்று: இளமை எழில்குலுங்குவதாய ஒரு பருவம், எழில் குலைதலால் இளமை சாம்பிற்றென்க-முதுமை மலர்ச்சியறுதலால் அதன் வழிப்பட்ட இளமையும் எழில் குலைந்ததென்க. வித்து விளைவின்றி, செடி பொலிவுறுதாகலின், முதுமை முகிழ்ச்சியற, இளமையும் குலைவுற்றதென்க.

பெண்டிர் பெண்மை பெட்பிறந்தன்றே: பெட்பு-வேட்கப்படுவதாந் தன்மை. இத்தன்மை அறுதலின் பெண்மையும் அற்றதென்க. பெண்மை அறின் உலகம் மறவழிப்படுமென்க.

ஆடவர் ஆண்மை அறக்குலைந்தன்று: ஆண்மை-ஆளுதல்தன்மை. ஆண்மை குறைவுற்றதென்க. ஆண்மையும பெண்மையும் நிறைவுற விளங்காமற் போமாயின் உலகு மறவுணர்வால் அழிக்கப்பெறுமென்க.

அறம் கூனின்று: அறம் கூனுதலுற்றது. கூன் – வளைவு. குல்–குன்–கூன. குல்லென்ன வேரடியில் நூற்றுக் கணக்கான சொற்கள் வளைதற் பொருளில் தோன்றியிருப்பதை மொழிப் பேரறிஞர் தேவநேயப்பாவாணரின "தமிழ் வரலாறு" என்னும நூலிற் கண்டு கொள்க.

பொருளரசாணையின் மறந்தலை நிமிர்ந்தன்று: பொருள் அரசு கொண்டு ஆணை (அதிகாரம்) செலுத்துதலின் மறம் தலை தூக்கிற்று என்க. நிமிதல்–ஏக்கழுத்தம் பெறல்.

மான் இழிந்தன்று: மானம் இழிநிலையுற்றது. ஆண்மை குலைந்து, அறங்கூனி, பொருள் அரசோச்சி, மறம் தலைநிமிரவே மானமும் இழிந்துபோனதென்க.

மணஞ்செய் கோலத்து மாண்பிழந்தன்றே: மணம் – இணையப்பெறும் தனமை. மணத்தல்–இணைதல்–சேர்தல். மள்–என்ற வேரடியாகப் பிறந்த சொல், மள்–மண்–சேர்ந்தது. மண்துகள் ஒன்றோடொன்று சேர்தலின் மண் எனப் பெயர்பெற்றது. சேராத மண்துகள்கள் உடையது மணல். மண் + அல்-மணல். மள் + து:மண்டு; மண்டுதல்–சேர்தல், நிறைதல். ஆண்பெண் சேர்தலின 'மணம்' என்றுயிற்று. இம் மண நிகழ்ச்சியில் இக்கால் பெருமை இலதென்க. ஆணும் பெண்ணும் இணைதல் உடலுறு புணர்ச்சியின் அடியில் மட்டுமன்றி உள

முறு புணர்ச்சியிலும் அடியொற்றியதாகலின், புள்ளினும் விலங்கினும் நடைபெறும் சேர்க்கையைவிட மாந்தச் சேர்க்கை பெருமை பெறுவ தாயிற்று. ஈண்டோ, இந்நிலை மனப்புணர்வின் வழியின்றி நேர்வதால் மாண்பிறந்த செயலாயிற்றென்க.

கணவர் மனைவியர் கட்டவிழ்ந்தன்றே: மனம் பிணிக்காத மண மாகலின் கணவர் மனைவியர் கட்டு அவிழ்கின்ற நிலையாயிற்றென்க. கட்டுதல்–மணத்தல். மணத்திற்கு அடையாளப் பொருளாகிய தாலி யையும் குறிக்குமென்று கொள்க. வெறும் உடலால் பிணிக்கப்பெற்ற கட்டு உடற்சூடு தணிந்தபின் அவிழ்தல்போல் மனக்கட்டு அவிழா தென்க. இக்கால் நடைபெறும் மணக்கட்டு மனக்கட்டன்றாக நிணக் கட்டாகலின் அஃது அவிழப்பெறுதல் இயல்பாயிற்று. நிணம்– கொழுப்பு–தசை–அரத்தம் இவற்றால் அமைந்த உடல்.

அறிவியல் உடலியல் அடி இழிந்தன்றே: அறிவியல்–பூதவியல், வேதியியல் முதலாய அடிப்படை நின்ற உண்மையியல். இவ்வறிவுக ளான் தெளிந்து தேரப்பெற்ற உண்மைகளும், அவைகொண்டுநிறு விய பல்லாயிரக் கணக்கான ஆக்கங்களும் மாந்தரின் வெறுமை நலத்துய்ப்புக்கே பயன்படுத்தப் பெற்று மேனோக்கம் இன்றிக் கீழ்மை யுற்றதென்க. என்னை? ஒளிக்கும் ஒலிக்கும் அடியாய மின்னும், அனற்கும் புனற்கும் அடியாய விண்ணும் அறிவியலால் வயப்படுத் தப்பெற்று மாந்தரின் உடல் துய்ப்புக்கே உதவுவன அன்றி, உளத் துய்ப்புக்குத் துணைநில்லாமை ஊன்றி உணர்க.

பொறியியல் மக்களின் பொறியரிந்தன்றே: கருவியறிவும், புதுப் புனைவுகளும் மக்களின் ஐம்புல வுணர்வுகளையும் குன்றச் செய்து, ஐம்பொறிகளையும் செயலறும்படி செய்தனவே யன்றி, மற்று அவற் றின் வளர்ச்சிக்குப் பயன் படாமை, ஊர்திகள், ஆடிகள் முதலாய காட்டுப் பொருள்களால் நாட்டிக் கொள்க.

கான்படு விலங்கின்...... நோக்கியே: கான்படு விலங்கு என்று அடைதந்து பிரித்தது, மனைபடு விலங்குகளாய நாய், பூனை, குதிரை, மாடு முதலாய விலங்குகள் வாழ்வு பயன்படுதலும், கான் படுவனவாய அரிமா, வரிமா, கரிமா, நரிமா முதலாய விலங்கு களின் வாழ்வு பயன்படாமையும் காட்டுவான் வேண்டி. அவை வாழ்வு பயன்படாமை கருதி, அவற்றின் ஒவ்வொரு முனைவும் அவற் றின் ஊன்வளர்ச்சிக்கான முனைவே என்றறிக. அத்தகைய முனைவே போல் இற்றை மாந்தரின் முயல்வும் எவ்வகை மாட்சியும் பெறாத தாகி இழிந்தது என்க.

இவ்வகையாகிய தேர்ந்து கொள்ளப்பெருத வாழ்க்கைக்கு மாந்தர் முயல்வு மாறுபட்டு வருதல் ஆரா விருள்சேர்ந்த அழிநிலேக்கு வழியாம் என்க. அவ்வழிநிலே நோக்கி இவ்வுலகம் விரைந்து செல்கின்றதாம் என்க!

தேரா வாழ்க்கை: தேர்ந்து கொளப்பெருத வாழ்க்கை. தேரா வாழ்க்கை என்றதால் தேர்ந்த வாழ்க்கை ஒன்றுண்டு என்பதும், அஃது ஒளி நிரம்பியதாக விருக்கும் என்பதும், அஃது ஒன்றே வாழ் நிலேக்கு வழிகாட்டுவதாகும் என்பதும் தெளியப்பெறும்.

திறம்புதல்: மாறுபடுதல். தில்–திர்–திரு–திருகு–திரும்பு–திறம்பு திருகு–மாறுபாடு.

ஆராவிருள்–பொருந்திய விருள்—விலக்கலாகா விருள்.

"மாந்த வியல்பாந் தன்மைகள் எல்லாம் முறையே குலேந்தும், வறிதாகியும், சிதைவுற்றும், இறந்தும், இழிந்தும், அழிந்தும் படுதலால், அவை யடியொட்டிய மாந்த வாழ்வின் இயற்கையும் மாறுபட்டதென்க; படவே அதற்கு நிலேக்களஞக உள்ள உலகமும் இருள் நிரம்பிய அழிநிலே நோக்கி விரைந்து செல்வதும் இயல்பேயாம் என்க" என எதிரது கூறி இழிவது தடுத்தலாம் இப்பாடல் என்க.

இது பொதுவியல் என் திணேயும், முதுமொழிக்காஞ்சி என் துறையுமாம் என்க.

---

0 நச்சு மனத்தரின் தமிழ்க்கேடு செய்யும் இதழ்களேத் தமிழர் தவிர்த்தல் வேண்டும்.

0 மெச்சும்படி தமிழ்மொழி, இனம், நாடு, இவை, மேம்பாடுற உலாவரும் தனித்தமிழ் இதழ்களேத் தமிழர் வாங்கிப் பயன் பெறல் வேண்டும்,

0, தமிழர்தம் கைகளில் என்றும் திகழ வேண்டிய கொள்கை இதழ்கள்!

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்.

விளக்கங்கட்கு

குறள்நெறி	பாரதிதாசன் குயில்	பாவை
மதுரை–6.	புதுவை–1.	கடலூர்–1.

வடவேங்கடம்

க. ப. அறவாணன், மு. க; கீ. க தே.

வேங்கடத்தை ஆண்ட வேந்தர்:

மாவண் புல்லி:

திருப்பதி தொடங்கி, கிருட்டிணை ஆறுவரை நீண்டு கிடந்த வேங்கடத்தை மூன்று மன்னர்கள் ஆண்டுள்ளதாகப் பாடல்கள் தெரிவிக்கின்றன. இம்மூவருள் வேங்கடத்தின் கிழக்குப் பகுதியை ஒருவனும், மேற்குப் பகுதியை ஒருவனும், நடுப்பகுதி அல்லது வடக்குப் பகுதியை மற்றவனும் ஆண்டிருத்தல் வேண்டும் என்று இராவ். சாகேப். கு. கோதண்டபாணி கருதுகிறார்[13]*, இவ்வாறு ஆண்டவேந்தருள் ஒருவனாக 'புல்லி' என்பவனை அகநானூறும் புறநானூறும் குறிக்கின்றன.*

கல்லா இளைஞர் பெருமகன் புல்லி
வியன்றலை நன்னாட்டு வேங்கடம் (அகம். 83)

மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடம் (அகம் 209)

கழல்புனை திருந்தடிக் கள்வர் கோமான்
மழபுலம் வணக்கிய மாவண் புல்லி
விழவுடை விழுச்சீர் வேங்கடம் (அகம். 61.)

நிரைபல குழீஇய நெடுமொழிப் புல்லி
தேன்தூங் குயர்வரை நன்னாட் டும்பர்
வேங்கடம் ... ... (அகம். 393)

... ... புல்லிய
வேங்கட விறல்வரை (புறம். 385)

என்று இலக்கியங்கள் புல்லி வேந்தனின் வலிமையையும் அவன் நாட்டின் வளமையையும் எடுத்துப் பேசுகின்றன. 'களப்பிரர்' குலத்தில் தலைவேந்தன் இவனே யாதல் வேண்டும். களவர் கோமான் என்றிருக்க வேண்டிய பாடமே 'கள்வர் கோமான்' எனப் பிழை பட்டு

13. Tamil Culture. Ibid. P. 81.

விட்டது என்பாரும் உண்டு[14]. களப்பிரர் இடையீடு, தமிழ்நாட்டில் ஆரியரை எதிர்த்து நடத்திய முதற்புரட்சி என்பதும், அப்புரட்சிக்குக் காரணமானோர் அயல் நாட்டினர் அல்லர் என்பதும், அவர் தன்மானங் காத்த தமிழ் மறவரே என்பதும் ஆராய்ச்சியால் விளக்கமாகின்றன[15]. அந்த முதற் புரட்சிக்குத் தலைமை தாங்கியவன் வேங்கட வேந்தனான புல்லியே ஆவான். வேங்கடப் பேரெல்லையின் மேற்குப் பகுதியைப் புல்லி ஆண்டான். அவனது நாட்டில் யானைகள் மிகுந்திருந்தன.

செந்நுதல் யானை வேங்கடம் (அகம். 265)

ஓங்கல் யானை உயங்கிமதம் தேம்பிப்
பன்மர ஒருசிறைப் பிடியொடு வதியும்
புடையலங் கழற்காய் புல்லிக் குன்றம் (அகம். 295)

ஞால்வாய்க் களிறு பாந்தட் பட்டெனத்
துஞ்சாத் துயரத் தஞ்சுபிழப் பூசல்
நெடுவரை விடரகத் தியம்பும்
கடுமான் புல்லி காடிறந் தோரே (நற்றிணை. 14)

என வரும் கழகப் பாடல்கள் இச்செய்தியை உணர்த்துகின்றன. இவனது வேங்கட நாடு எவ்வாறு வெவ்விய பாலையாக இருந்தது என்பதை அகம் 295 ஆம் பாடல் படம்பிடித்துக் காட்டுகிறது.

'நிலத்தில் நீர் அற்றுவிட்டது; சுனைகளும் வற்றிவிட்டன. மலையிலே உள்ள மரக்கிளைகள் வெம்மையால் எரிந்துவிட்டன. கதிரவனின் கடுங்கதிர்வீச்சால் மூங்கில்கள் தெறித்தன; வேங்கைப்புலியை வென்ற யானை வெம்மையால் வருந்தி வாடி, நிலாப்போலும் நிறத்தினையுடைய கொம்பிலே பெரிய கையை அணைத்துப் பல மரங்களையுடைய ஒரு பக்கத்தே தன் பிடியானையோடு தங்கும். அத்தகு நடையருங் கானம் அது.'

திரையன்: வேறு சில பாடல்கள் தொண்டையர் குலத்தினனான திரையன் என்பான் வேங்கடத்தை ஆண்டதாகக் குறிப்பிடுகின்றன.

14. Dr. S. Krishnaswami, Ancient India and South Iindian History and Culture PP. 480-82

15. 'முதற்புரட்சி' தென்மொழி, 1967 சனவரி இதழ். பக்-37,38.

வெண்வேல் திரையன் வேங்கட நெடுவரை (அகம். 85)
தொண்டையர் அடுக்கம் (குறுந். 260)
வினைநவில் யானை விறற்போர்த் தொண்டையர்
ஓங்குவெள் ளருவி வேங்கடத் தும்பர் (அகம். 213)

கீழைக் கடற்கரைக்கு அண்மையில் உள்ள பவத்திரி என்னும் நகரை இவன் தலைநகராகக் கொண்டிருந்தான் போலும்.

செல்லா நல்லிசைப் பொலம்பூண் திரையன்
பல்பூங் கானல் பவத்திரி (அகம். 340)

இந்நகரம் கூடுரு(Gudur)க்கு அண்மையில் இருந்திருத்தல்வேண்டும். கூடுர், ஆந்திர நெல்லூர் மாவட்டத்தில் உள்ளது. இச்செய்தி கூடுரில் கிடைத்துள்ள 88–105 ஆம் கல்வெட்டுகளால் புலனாகின்றது. ஆனால் இந்தப் பவத்திரி நகரம் கடலால் அழிக்கப்பட்டு விட்டது. இச் செய்தியைக் 'கடல்கொண்ட பவத்திரி கோட்டம்' என்ற வழக்குறுதிப்படுத்துகிறது. திரையன், பவத்திரி கடலால் கொள்ளப்பட்டு அழிக்கப்பட்ட பின்னர்தான் காஞ்சியைத் தலைநகராகக் கொண்டான் போலும்.

ஆதனுங்கன்: குறுநிலத் தலைவனும், வள்ளலுமாய ஆதனுங்கன் வேங்கடமலைக்குத் தலைவனாயிருந்தான் என்பது புறம். 389-ஆம் பாடலால் தெரியவருகிறது. அப்பாடலின்படி ஆதனுங்கன் என்பான் வேங்கடமலைத் தலைவருள் முதியவன் ஆதல் வேண்டும்.

'கல்லிழி அருவி வேங்கடங் கிழவோன்
செல்வுழி எழாஅ நல்லேர் முதியன்
ஆதன் நுங்கன் போல நீயும்'

என்று குறிக்கப்படுகிறான். வேங்கட நாட்டின் வடபகுதியை இவன் ஆண்டிருத்தல் வேண்டும். இவன் தொடர்பான கல்வெட்டுச் செய்தி ஒன்று நமக்கு வியப்பை யூட்டுகிறது. கிருட்டிணை ஆற்றை ஒட்டிய பகுதியை நுங்கன் என்ற பட்டமுடைய தெலுங்கு மன்னன் ஆண்டதாகக் கல்வெட்டுகள் உணர்த்துகின்றன. 14-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த கல்வெட்டொன்று நுங்க தேவ மகாராயன், நுங்கராயன் என்னும் பெயர்களைக் குறிப்பிடுகின்றது 15-ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டொன்று ஓங்கோல் வட்டத்தில் கனபர்த்தி எனுமிடத்தில் வீரன் நுங்கன் என்பான் ஆண்டதாகக் குறிக்கிறது[16]. ஆதனுங்கன் என்ற கழகக் கால மன்னனது ஆட்சி எல்லை கிருட்டிணை ஆறுவரை நீண்டிருந்

16. ஔவை. துரைசாமி உரை. புறநானூறு. 389.

தது என்பது இக் கல்வெட்டுச் செய்தியால் உறுதியாகிறது. கிருட்டிணை எல்லைவரை ஆண்ட அம்மன்னனை 'வேங்கடங் கிழவோன்' என்று குறிப்பதன் மூலம் வேங்கட நாட்டெல்லை கிருட்டிணைவரை அகன்றிருந்தது என்பதும் தேற்றமாகும்.

எருமை நாடு அல்லது மைசூர் மாநிலம்

பாண்டி நாட்டின் வடக்கே உள்ள நாடு எருமை நாடு எனப் புலவரால் குறிக்கப்பட்டது. இந் நாட்டின் தொடக்கம், பாண்டி நாட்டின் மேற்குமலையிலேயே தொடங்குவதால் இஃது 'எருமை குட நாடு'என்றும்அழைக்கப்பட்டது. நுண்ணிய கலைத்தொழில் வாய்ந்த அணிகளை அணிந்த தலைவி ஒருத்தியின் அழகைப்போன்று எருமைக் குடநாட்டின் அழகு இருந்தது என பாவலர் ஒருவர் போற்றுகின்றார்.[17] அகம் 253-ஆம் பாட்டு, காதலன் ஒருவன் எருமை நாட்டில் உள்ள அயிரை யாற்றைக் கடந்து பாலைநிலத்தை அடைவதாகக் குறிக்கிறது.

பேரிசை எருமை நன்னாட்டு உள்ளதை
அயிரியா றிறந்தனர்

அயிரியாற்றின் அக்கரையிலுள்ள பகுதி காடு, பாலைவெளி என்பதை இன்னொரு பாடலும் காட்டுகிறது.

கழையமல் சிலம்பின் வழைதலை வாடப்
பைங்கொடிப் பாகற் செங்கனி நசைஇக்
கான மஞ்ஞை கமஞ்சூல் மாப்பெடை
அயிரி யாற்று அடைகரை வயின்நரலும்

என்று அப்பாடல் பேசுகிறது (அகம்: 177). இந்த அயிரியாறு இற்றைய மைசூர் மாநிலத்தில் அகரி (Hagari) என்ற பெயரோடு ஓடுகிறது. தற்போதைய துங்கபத்திரை ஆற்றின் துணையாறாக (tribute) ஓடிக்கொண்டிருக்கிறது. மேற்குத் தொடர்ச்சி மலையின் கிழக்குச்

17. அகம் –115.

சாரலில் இவ்வாறு பிறந்து, மைசூர் மாநிலத்தின் வட எல்லை நோக்கிச் செல்லுகிறது.[18]

கழகப் பாடல்களில் எருமை நன்னாடு (அகம், 340), எருமையூர், (அகம், 16), எருமை வெளி (அகம் 72, 73, புறம் 273, 303), எருமை குட நாடு (அகம், 115) எனக் குறிக்கப்படும் எருமை நாடு என்பது இன்றைய மைசூர் மாநிலமே. இச் செய்தியை மைசூரிலும் (E. P. Car. Vol X Cu 20), தமிழ்நாட்டிலும் (A. R. for 1907. Para 1) கிடைத்துள்ள கல்வெட்டுகள் உறுதிப் படுத்துகின்றன. எருமை என்னும் தமிழ்ச்சொல்லுக்கு நேரான வடசொல் 'மகிஷம்' என்பதாகும். புராணப் போக்கின்படி 'மகிஷன்' எனும் அசுரன் வாழ்ந்ததாகவும், அவனைச் சாமுண்டேசுவரி எனும் பெண் தெய்வம் கொன்று விட்டதாகவும், அதனால் அத்தெய்வம் "மகிஷாசுர மர்த்தினி" என அழைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது. இப்புராணக் கதை மிகப் பிற்காலத்தது எனபது தெளிந்த செய்தி. திராவிடத்திற்குள் நுழைந்த ஆரியர், தமிழ்ப் பெயர்களை எல்லாம் ஆரிய மொழியாக மாற்றினர் என்பது தமிழகத்தின் ஊரும் பேரும் சாற்றும் உறுதியான செய்தி. ஆதலின் எருமை ஊர் என்பதே ஆரியரின் கைவண்ணத்தால் மகிஷனூர் என்றாகி மைசூர் எனத் திரிந்திருத்தல்வேண்டும்

செந்தமிழ் நாடாம் குடநாடு:- இவ்வெருமை நாடு குட நாடு என்றும் குறிக்கப்பட்டுள்ளது. சேர குடநாட்டினின்று இந்நாடு வேறுபட்டது என்பதை உணர்த்த 'எருமை குட நாடு' என்றே குறித்துள்

18. சிலப்பதிகாரம் (நடுகல்-145), பதிற்றுப்பத்து 21-29, 70-26, 79-18, 88-12-மூன்றும் பதிகம் ஆகியவற்றுள் அயிரை என்றோர் மலையும், அதே பெயருடைய ஆறும் சேர நாட்டில் இருந்தனவாகக் குறிக்கப்பட்டிருக்கின்றன. (பதிற்றுப்பத்து-ஔவை. சு. துரைசாமி உரை காண்க) இந்த அயிரை, எருமை நாட்டில் ஓடும் அயிரையாற்றினின்று வேறுபட்டது என்பது அறியத்தக்கது. அயிரை என்னும் அகரிஆறே தமிழ்நாட்டின் வடமேற்கெல்லை என்பார் உண்டு. அயிரியாற்றங் கரையிலுள்ள காட்டையும் கடந்துதான் மொழிபெயர் அயல் தேயத்திற்குப் போக வேண்டும். ஆதலின் அயிரியாற்றங்கரையே தமிழ் நாட்டெல்லை எனக் கருதல் பொருத்தமன்று.

னர் (அகம். 115). இக் குடநாடு உள்ளிட்ட பன்னிரு நாடுகளைத் தொல்காப்பியர் 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நிலம்' (சொல். 400) என்று குறிப்பிடுகிறார்;

'தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி
பன்றி அருவா அதன்வடக்கு—நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டெண்' [19]

தமிழ் மொழியின் கிளைமொழி (Dialect) பேசப்பட்ட பன்னிரு நாடுகளுள் குடநாடு அல்லது எருமை நாடும் ஒன்று என்பது கருதத் தகுந்தது. இச் செந்தமிழ் நாட்டினின்று எருமை வெளியனார் (புறம் 273, 303, அகம் 73) என்ற புலவரும், அவரது மகனாராகிய கடலனார் (அகம். 72) என்பாரும் பண்டைத் தமிழ்ப் பாவலர்களாக இலங்கியுள்ளனர்.

எருமை நாட்டில் பேசப்பட்ட மொழியை வடுக மொழி என்று குறித்தனர். பழங்காலத்தில் திருப்பதிக்கு வடக்கே இருந்த மக்களும், மைசூர் மாநில மக்களும் 'வடுகு' என்ற மொழியையே பேசி இருத்தல் வேண்டும். பின்னர்தான் வடுகமொழி கன்னடம், தெலுங்கு என்று இரண்டாகப் பிரிந்து. வடுகமொழி தெலுங்கிற்கே உரிய பெயராக நிலைத்திருக்க வேண்டும்[20]. கன்னடப் (கருநாடகப்) பெண்டிர் பேசிய மொழியை 'வடுகு' என்றே கலிங்கத்துப் பரணி ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

19. யாப்பருங்கலம் பழைய உரை மேற்கோள், நன்னூல் விருத்தி 273, மயிலைநாதர் உரை 275. சேனாவரையத்தில் செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம் பற்றிக் குறிக்கும்போது புனல் நாடு, வேணாடு என்பவற்றை விடுத்து, பொங்கர் நாடு, ஒளிநாடு என்ற குறிப்புக் காணப்படுகிறது. இவ்விரண்டு பெயர்களும் முன்னிரண்டு நாடுகளின் வேற்றுப் பெயர்கள் போலும். இந்த மாற்றுப்பெயர்களைத்தருபவர்கள் சேனாவரையரும நச்சினார்க்கினியரும். மாறாக, 'நச்சினார்க்கினியர்மட்டும் தந்தார்' என்ற செய்தி 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம் (சழகவெளியீடு 1956) எனும் சிறந்த நூலில் பக்கல் 23இல் அடிக்குறிப்பாகத் தரப்பட்டுள்ளது. இக் குறிப்புச்சரியான பெயர்ப்பன்று. மூலநூலில் (Tamils 1800 years ago) சரியாகக் கொடுக்கப்பட்டுள்ளது.
20. 1800 ஆண்டுகட்கு முற்பட்ட தமிழகம். பக். 56.

மழலைத்திரு மொழியிற் சில வடுகும் சிலதமிழும்
குழறித்தரு கருநாடியர் குறுகிக் கடை திறமின்.

(கடைதிறப்பு. 22)

யாப்பிலக்கண நூலாசிரியரான காக்கை பாடினியார்,

'வடதிசை மருங்கில் வடுகு வரம்பாகத்
தென்திசை உள்ளிட்ட'

என்று குறித்திருப்பதை நோக்குக[21]. வடுகு என்பது கன்னடத்தை யும், தெலுங்கையும் குறிப்பது என முன்பே விளக்கப்பட்டது. தமிழகத்தின் எல்லை இன்றைய கன்னடநாட்டு எல்லை. தெலுங்கு நாட்டெல்லை வரை நீண்டிருந்தது என்பது இதனாலும் உறுதியாகிறது.

வேங்கட எல்லை கிருட்டிணை ஆறுவரை:

தமிழகத்தின் வடமுனையில் உள்ள நாடுகள் அருவா நாடு என்றும், அருவா வடதலை நாடென்றும் பகுக்கப்பட்டிருந்தன. இந் நாடுகளே தொண்டைநாடு எனப் பேசப்பட்டன. அருவா நாடுகளில் வாழ்ந்த மக்கள் 'அருவாளர்' எனக் குறிக்கப்பட்டனர். 'அருவர்' என்றும் அந்நாட்டுத் தமிழர் அழைக்கப்பட்டனர். அருவர் என்பதே தமிழர்க்கு வழங்கும் பெயர்களுள் ஒன்றாயிற்று.

'அருவர்! அருவர்! எனு இறைஞ்சினர்'

எனவரும் கலிங்கத்துப்பரணி கண்ணியில், 'அருவர்' என்ற சொல் தமிழரையே குறித்தல் காண்க.[22]

அருவர் எனும் தமிழர் வாழ்ந்த தொண்டைநாடு வடபெண்ணைக்கும், தென்பெண்ணைக்கும் இடைப்பட்ட பகுதியாகும்.[23] வடபெண்ணையாறு மைசூரில் பிறந்து, முழுக்க முழுக்க ஆந்திர மாநிலத்தில் ஓடு

21. செய்யுளியல். நூற்பா. 1. உரை.
22. காளிக்குக் கூளி கூறியது கலிங்கத்துப்பரணி-
141.(மர்ரே பதிப்பு)
23. '... the river South Pennar where began the division known as Aruvanadu, which extended northwards along the coast of almost as far as Northern Pennar. This Constituted the Thondainadu ....' Dr. S. K. Ayyangar. Introduction to the Pallavas of Kanchi. P. 2.

கிறது இவ் வடபெண்ணையாறு வரை அருவா நாடு நீண்டிருந்தது என்பது தெளிவாயிற்று. தொல்காப்பியத்தின் மொழியெல்லை வட வேங்கடம்வரை யிருந்தது என்பது பாயிரக்கூற்று. இவ்வேங்கடம், கிருட்டிணை ஆறுவரை பரவியிருந்தது என்பது, முன்னே இலக்கியச் சான்றுகளாலும் ஆதனுங்கன் கல்வெட்டுச் சான்றுகளாலும், இயற்கைச் சான்றுகளாலும நிறுவப்பட்டது 'பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டின் வடஎல்லை கிருட்டிணை ஆறுவரை இருந்தது என்பதைச் சிற்ப சாத்திரம் கூறுகிறதென்று கேட்டிருக்கின்றேன்' என்று டா. உ. வே. சாமிநாதர் குறிப்பிடுகிறார்[24].

"நள்ளிகைக்கு 16-ஆம் பாகையில் உள்ள கிருட்டிணை யாற்றின் ஊற்றுக்கண் தொடங்கி அவ் யாறு கடலோடு கலக்கும் இடம் முடிய நீண்டு விளங்கும் நிலப்பகுதியைப் பாண்டிய மக்கள் தொகுதியின் வாழிடத்து வடஎல்லையாகக் குறிக்கின்றார் பிளினி"- என்கிறார் கொலென் தென்பார் எனும் அறிஞர்.[25] இவற்றை எல்லாம் நோக்கத் தமிழகத்தின் பண்டைய வடஎல்லை கிருட்டிணை ஆறுவரை நீண்டிருந்தது என்பது உறுதிப்படும்.

"தொல்காப்பியஞ் செய்கின்ற காலத்தில் நெல்லூர் மாவட்டத்தின் தென்கோடியும், சித்தூர், வடார்க்காடு, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மலையாளம், நீலகிரி என்னும் மாவட்டங்களும் தென்கன்னட மாவட்டத்தின் முக்காற்பங்கும் மைசூர் மாநிலத்தின் தென்பாதியும், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை மாநிலங்களும், கடலின் வாய்ப்பட்ட பேரியாற்றோடு கூடிய பனை நாடுகளும், தமிழ்வழங்கு நிலங்களாகவே இருந்தன என்பதும் அக்காலத்து இந்நிலங்களில் வேறு மொழிகள் வழங்கிற்றில என்பதும் நன்கு விளங்குகின்றன" என்ற அறிஞர்களுடைய கருத்தும் தொல்காப்பியர் காலத் தமிழ் எல்லை இன்றைய திருப்பதி மலையோடு ஒடுங்கி விட்டதன்று என்பதைத் தெளிவுபடுத்தும்.[26]

---

24. சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும். 1934. பக். 10.
25. மேனாட்டறிஞர் கண்ட தமிழகம். பக். 2.
26. சங்கநூல் கா. ர. கோவிந்தராசன். மேற்கோள் ந, சி. கந்தையா. தமிழகம். பக். 65.

குமிழிப்பகை!

-மணிவேலன்.

1. ''எழுத்தாளர் சங்க'' மெனும் நிறுவனத்தில் இருப்போரே!
என் தமிழ்த்தாய்க்
கழுத்தறுக்கும் 'திருப்பணி'யைக் கணக்காகச் செய்கின்றீர்.
கையில் தூவல்;
புழுத்தநடைக் கதையெழுதத் தூக்கிவிட்டீர்; பொய்ம்மையிலே
புரளுகின்றீர்;
கொழுத்துவிட்டீர்! அதனாற்றான் நாடோறும் தமிழ்த்தாய்க்குக்
குறிப றித்தீர்!

2. மொழிநடையை யறியாது முண்டமென வாழ்கின்றீர்!
முத்த மிழ்த்தாய்
விழிக்கடையில் நீர்தேங்கச் செய்கின்றீர்; தனித்தமிழ்க்கு
வித்திட் டோராம்
மொழிக்கடலெம் மறைமலையார் தமையிழித்துப் பேசுகின்ற
மூளையற்ற
கழிசடைகள் கூட்டத்தைக் கண்டிக்கத் திறனற்ற
கசடர் நீவிர்!

3. அம்மாமி மாரெல்லாம் ''அப்பளாம்'' ''வடாம்'' போட்டே
அலுத்துவிட்டுச்
சும்மாவே மூலையிலே கிடந்திட்ட சங்கெடுத்துத்
தூரா வாயால்
பம்மென்று முழக்கி,யதைக் கெடுத்திட்ட தாதன்போல்
பார்ப்பார் வீட்டின்
''பொம்மனாட்டி'' அடிக்கின்ற கொட்டத்தைக் கதையெழுதிப்
பூரிக்கின்றார்!

4. ''மாட்டுப்பெண்'' என்கின்றார்; ''மணாட்டுப்பெண்''எனும் [சொல்லை
மாய்த்தே விட்டார்!
வீட்டினிலே ''அம்மாஞ்சி'' எனப்பேசி ''அம்மான் சேய்''
வீழ்த்தி விட்டே
ஏட்டினிலும் அதேநடையில் எழுதுகின்றார்! இதைக்கேட்க
யாருமில்லை?
''ஊட்டுக்குப் போகலா''மென் றெழுதுவதே தமிழென்றும்
உளறுகின்றார்!

5. தனித்தமிழே தமிழன்றாம்; சர்மாவும் சாத்திரியும்
ஐயங் காரும்
"னொனனொன"வென் றழுவதுவும் வெற்றிலையைக் குதப்பு
குழறு வாயில் [கின்ற
"உனக்கெ"ன்று சொல்லுவதை "நோக்"கென்று பேசுவதும்
உயர்ந்த சொல்லாம்!
இனித்தமிழன் உருப்படுவான் எனவெண்ணிப் பயனில்லை!
இறத்தல் நன்றாம்!

6. என்னேடா தமிழ்மகனே! உனக்கென்ற தனிக்கொள்கை
இருக்க வேண்டா?
என்னேடா உனக்கென்று தனிப்பட்ட பண்பாடொன்(று)
இருக்க வேண்டா?
என்னேடா உனக்கென்று தனியேடு வேண்டாவோ?
இனத்தைக் காக்க
என்னோடு வாடாநீ; மொழியுரிமை யடிப்படையில்
இணைந்து நிற்போம்!

7. பின்னோடிப் பின்னோடிப் பிறன்முதுகில் மறையாதே,
பேடி போல!
முன்னோடி வாடாநீ; விழிதிறந்து தலைநிமிர்ந்து
மீசை நீவி
"என்னேடா? யாரடாநீ? எழுதுதற்குத் தகுதியுனக்
கேதடா?" வென்(று)
இன்றைக்கே கேட்பதற்கு முனைந்துவிட்டால் அவரெல்லாம்
எடுப்பார் ஓட்டம்!

8. ஐந்நூறும் ஆயிரமும் சிறுகதைக்குக் கொடுப்பதனால்,
'ஆகா' வென்று
கைந்நிறைய வாங்கிடலாம் எனவிரும்பிக் கதையெழுதக்
கருதல் வேண்டா!
பைநிறையப் பணம்கொடுப்ப தெதற்கென்று சிறிதேனும்
பகுத்துணர்ந்தால்
மெய்தெரியும்! தமிழ்மகனே! மெய்ம்மறத்தல் சரியன்று;
மெய்யு ணர்வாய்!

9. பணங்கொடுத்தல் கதைக்கன்று; தமிழ்ப்பண்பும் தனித்
பையப் பையப் [தமிழும்
பிணமாக்கும் திருப்பணியைக் கதைப்பெயரால் செய்கின்ற
"பெருமைக்"கன்றோ?
பிணக்குற்றே அரசியலில் திரிந்தாலும், கட்சிகளைப்
பின்னர்த் தள்ளி
உணர்வினிலே கலந்துவிட்ட மொழிக்காகத் தமிழரெலாம்
ஒன்று சேர்வோம்!

10. தமிழனென்று பிரித்தறிய இருக்கின்ற ஒரேகருவி
தமிழே யன்றோ?
தமிழில்லையேல் தமிழனெனப் பிரித்தறிதல் இயலாது;
சலிப்பை விட்டுத்
திமுதிமென நாமெழுந்தால் சுழித்துவரும் வெள்ளத்தில்
தேங்கி நிற்கும்
குமிழியெலாம் படபடவென் றுடைவதுபோல் மொழிப்பகைவர்
குலமே சாயும்!

("யதார்த்த இலக்கியப் படைப்பாளர்" எனக் கூறிக் கொண்டு ஒருகூட்டம் கிளம்பியுள்ளது. வீட்டில் பேசுவதையே ஏட்டிலும் எழுதவேண்டும் என்றும், அதுதான் இயற்கை யென்றும், பிறவெல்லாம் செயற்கை யென்றும் பிதற்றி வருகின்றனர். 'உடலுக்கு ஆடையிட்டு அழகு செய்வதும் செயற்கை!' என்று கூறிக் களைந்துவிட்டாலும் வியப்பதற்கில்லை! இக்கூட்டத்தினரின் "படைப்புகளை"ப் படித்தால் இதுபோல் உடைப்புகளைக் காணலாம்! இதை நாடெங்கும் கண்டித்தல் வேண்டும்.)

அறிவிப்பு

0 தென்மொழி, தமிழ்ச்சிட்டு இதழ்கள் சார்பாக அலுவலகத்திற்கு மடல் வரையும் அன்பர்கள் (உறுப்பினராக இருப்பின்) தங்கள் உறுப்பினர் எண்ணைத் தவருது குறிப்பிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். உறுப்பினர் எண் இன்றி வரும் மடல்கள் மறுமொழிக்கு உரியனவாகா.

அமைச்சர்,
தென்மொழி, தமிழ்ச்சிட்டு.

கண்மூடி வழக்கங்கள்.

-இரா. கண்ணிமை.

அறிவியல் வித்தூன்றி-ஒளி விளக்கமாகத் திகழும் மேலை நாடுகளில் வாழ்ந்து சென்ற அறிஞர்கள் "இந்தியா மூட நம்பிக்கைகளுக்குத் தாயகம்," என்று எழுதிவைத்திருக்கிறார்கள். ஆனால், உலகத்திலேயே முன்னேற்ற நடைபோடும் நாடு என்று பெயர்பெற்ற பிரிட்டனே, கண்மூடி வழக்கங்களை இறுகப் பிடித்துக்கொண்டிருக்கும் ஒருநாடு என்பதை யாரும் மறுக்கவோ மறைக்கவோ இயலாது. உலகின் மற்ற பகுதிகளில் இருப்பவர்களுந்தாம் சில மூட நம்பிக்கைகளைக் கொண்டிருக்கிறார்கள்; பின்பற்றுகிறார்கள்.

நம் நாட்டில் அரசமரத்தையும் ஆலமரத்தையும் தொழுவதைக் கண்டு ஆங்கிலேயர் வியக்கிறார்கள்- பகடி செய்கிறார்கள். ஆனால் அவர்கள் இன்றும் கிறித்துமசு மரத்தை வணங்குகிறார்கள்.

மற்றவர்களுக்குப் பல் விழுந்தால் அதனை உப்புடன் கலந்து, நிலத்தில் புதைத்து மறுநாள் காலையில் பார்த்தால் ஆறு பென்னிகள் கிடைக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. அரம்பையர் இப்படி அருள்புரிவார்களாம்.

பதினொன்று என்பது ஆகாத எண்ணிக்கை. இதன் நிலையைப் போக்கிக் கருநிறம் உள்ள இசுகாட்டு நாயின் மயிரைக் கூடவே வைத்துக் கொள்வார்களாம்.

கருப்புப் பூனை ஓடினால் நல்லதாம். ஆனால், அஃது ஏணியின் கீழே ஓடக்கூடாதாம்; ஓடினால் தீமையாம்-நல்லதன்றாம்.

ஒருவீட்டின் கண்ணாடி உடைந்து விட்டால்-பின்னர் தொடர்ந்து ஏழாண்டு அவ் வீட்டின் சூழ்நிலை மாறுபட்டு வருமாம்.

தட்டில் இருக்கும் உள்ளீட்டப்பத்தின் (சாண்டுவிச்சின்) கடைசித் துண்டை ஒரு பெண்மணி உண்பது தீமையாம். அவ்வாறு உண்டவர்கள் விரைவில் முதுமைநிலை யடைவார்களாம்.

ஒரே நெருப்புக்குச்சியில் மூன்றுபேர் சுருட்டுப் பற்றவைத்துக் கொண்டால் அது தீமையில் முடியுமாம்! 13 என்ற எண்ணிக்கை அவர்களுக்கு ஆகிவராதென்பது தெரிந்தது தானே! அதனால் கிறித்

துவக் கோயில்களில் முதல் மணியை 13 முறை அடித்தால் அதைப் பதின்மூன்று என்னுமல் 12-A என்பார்களாம். 13 என்ற எண் மேலை நாட்டினருக்கு ஆகிவராததன் காரணியம் இதுதான். சூடாசு இசுகாரியேடு என்பவன் ஏசுவின் சீடர்களுள் பதின்மூன்றாமவன். அவன் ஏசுவைக் காட்டிக்கொடுத்துவிட்டுத் தற்கொலை புரிந்து கொண்டான். இதனால் எல்லாருக்கும் இந்த 13 என்ற எண்ணைக் கண்டு அச்சம் பிறந்துவிட்டது.

நம் நாட்டினரைப் போலவே அவர்களும்-நாளிதழ்களில்-கணியம் பார்க்கக் காத்திருப்பார்களாம். ஆங்கிலப் பெண்கள் தெருவில் செல்லும் குறிசொல்பவர்களைக் கண்டு முகத்தைக் கோணிக்கொண்டாலும், பிறருக்குத் தெரியாமல் வீட்டில் குறி கேட்பது, சடங்கு பார்ப்பது எல்லாம் ஏராளம்.

நாகர் வழிபாடு நம் நாட்டில் மட்டும் அன்று; உலகத்தின் பல பகுதிகளிலும் உண்டு. பாம்பைக் கொன்று அதைத் தலைகீழாகத் தொங்கவிட்டு, அதன் வாலைக் குழந்தைகள் தொடும்படி செய்வார்களாம், தென் அமெரிக்காவிலுள்ள நிலநடுக்கோட்டின் (பூமத்தியரேகையின்) காட்டுமாந்தர்.

காட்டு வாழ்நர் சிலர், பாம்பின் நஞ்சை அம்பின் நுனியில் வைத்துத் தமக்குத் தீங்கு நேரிடும்போது பயன்படுத்துவார்களாம். அவர்களே தெருவில் பாம்பு இறந்து கிடந்தால், அதை மிகச் சிறப்பான முறையில் அடக்கம் செய்வார்களாம்.

நம் நாட்டில் புதையலைப் பாம்பு காவல் காப்பதாக நம்புகிறார்கள்-அவ்வாறே இத்தாலிய மாந்தரும் நம்புகின்றார்களாம்.

நம் நாட்டிலே வீட்டில் தேனீ கூடுகட்டினால் உயிருக்கு அழிவு என்பார்கள். இங்கிலாந்திலும் வீட்டின் மூலையில் மரப் பகுதிகளில் தேனீ கூடுகட்டினால் வீட்டுத் தலைவனுக்கு ஆகாது என்று வேலைக்காரர்கள் நினைப்பார்களாம். அவர்கள் தேனீக்கூட்டை விற்பார்கள்; ஆனால், தேனீயை விற்க மாட்டார்களாம். அப்படி ஒரு நம்பிக்கை.

இரவில் தெருநாய் ஊளையிட்டால் எமன் வருவான் என்றும் தெருவில் நோயாளி இருந்தால் உயிருக்குத் தீமை என்றும் நம் நாட்டில் கூறுவார்கள். அமெரிக்க மசாசூசெட்சு மாநிலத்தில் வாழும் மாந்தர், நள்ளிரவில் ஆவினம் 'அம்மா' என்று கத்தினால் மேற்கண்டவாறு நினைக்கிறார்களாம்.

எசுக்கிமோக்களில் ஒருவன் இறந்தால் அவனுக்கு உதவியாகத் துறக்கம் போக வென்று ஒரு நாயையும் உயிரோடு புதைப்பார்களாம். பிரான்சு மாந்தர் தம் அன்புக்குரிய குழந்தைகள் இறந்துவிட்டால், அவர்களுடைய செப்பு, பொம்மை முதலிய விளையாட்டுப் பொருள் களையும் அவர்களோடு புதைப்பார்களாம்.

நியூசிலாந்தில் மாந்தர் இறந்துவிட்டால், பிணத்தின் உகிரைக் கத்தரித்துக் கையைக் கட்டியபின்பே, இறுதிச் சடங்கைச் செய்வார்க ளாம். இல்லாவிட்டால் இறந்தவன் இடுகாட்டிலிருந்து ஓடிப்போய்ப் பேயாக அலைவானும்.

எகிப்தியப் பெண்கள் அடுப்பின்மேல் பெருக்கல் குறியிடுவார்க ளாம். அதே குறியைச் சுடும் வறட்டியிலும் போடுவார்களாம். உணவி னுல் நேரும் தவறுகள் அதனுல் சரியாகிவிடுமாம்.

சப்பானியர் தாம் எங்காவது புறப்படும் நேரத்தில் உகிர்களைக் கத்தரித்துக்கொள்ள மாட்டார்கள். பிரிட்டனில் செய்வதுபோல் அவற் றைக் கத்தரித்து நெருப்பில் போடவும் மாட்டார்களாம்.

ஆங்கிலப் பெண் இல்லத்தைப் பெருக்கிக் குப்பையைத் தெருவில் எறியமாட்டாள்-கொல்லைவழியாக எறிவாள். தெருவில் எறிந்தால் வீட்டிற்கு வந்த நல்ல தேவமகள் சொல்லாமல் போய்விடுவாள் என்ற அச்சம்.

நம் நாட்டில் உறங்கி விழித்ததும் கைம்பெண்ணைப் பார்க்கமாட் டார்கள். அதுபோல் பிரஞ்சுக்காரர்கள் நடு இரவில் பூச்சார்த்தியைப் பார்க்கமாட்டார்களாம்.

எஃப். ஆர். சி. எசு. பட்டம்பெற்ற மருத்துவரிடம் நம்பிக்கை இல்லாதவர்கள், குருட்டுப் பழக்கம் உள்ள நாடோடி மருத்துவனை நம்பி அவனிடமும் சிலநேரம் மருத்துவம் செய்துகொள்கிறுர்கள்.

மே மாத மழையில் நனைந்தால் அதுவரையில் நலம்பெருத நோய்கள் எல்லாம் தீர்ந்து விடுமென்று கியூபா மாந்தர் நினைக்கிறுர் கள். புவிமுனை (துருவ) வாழுநர், பூனைத்தோலால் தைத்த சட்டை யைப் போட்டுக்கொண்டால் காசநோய் தீரும் என்று நம்புகிறுர்கள்.

திருடிய உருளைக்கிழங்கைக் குடைந்து பையில் வைத்துக் கொண்டு ஊருராய்ச் சுற்றினுல் வாதநோய் நலம்பெறும் என்று மேலை நாட்டினர் நம்புகிறுர்கள்.

நம் நாட்டில் காதலர்களுக்கும், பாவலர்களுக்கும் நிலவு தோன் றும் காலம் என்ருல் பெருமகிழ்வு. கியூபா மாந்தருக்கு நிலவைக் கண் டால் நடுக்கம். தலையை முக்காடிட்டுக்கொண்டுதான் நிலவில் வெளியே வருவார்களாம். இல்லத்தில் இருந்தால் பலகணியை மூடி விட்டு, துணியை இழுத்துப் போர்த்திக்கொண்டு உறங்குவார்களாம்

எனவே பகுத்தறிவுக் கருத்து–விதைகள் ஆங்காங்கே தூவப் பட்ட போதிலும், எங்காவது ஒரு மூலையில் மூட நம்பிக்கையின் முடை நாற்றம் வீசிக்கொண்டுதான் இருக்கிறது. உலகின் எல்லாப் பகுதிகளிலும் மூட நம்பிக்கைகள் தலைவிரித்தாடிக்கொண்டுதான் இருக்கின்றன. இன்னும் எத்தனை எத்தனை அறிவியல் அறிஞர் கள் தோன்ற வேண்டுமோ, தெரியவில்லை–இந்தக் கண்மூடி வழக்கங் களை மண்மூடிப்போகச் செய்வதற்கு? O

விளம்பர அறிக்கை.

தென்மொழி, தமிழ்ச்சிட்டு பற்றிய விளம்பரச் சிற்றறிக்கைகள் ஆங்காங்குப் பரப்பும் பொருட்டு வண்ணத்தாளில் நான்கு பக்க அள வில் அச்சிடப்பெற்றுக் கையிருப்பில் உள்ளன. தமிழன்பர்களும் விற்பனையாளர்களும் தேவைக்கு உடனே ஆவன செய்க!

அவ்வவ்வூர்களிலும் கிடைக்குமிடம் பொறித்துக் கொள்வதற் கான இடம் ஒதுக்கப் பெற்றுள்ளது. அதில் இழுவையச்சு (Rubber Stamp) பதித்துக் கொள்ளலாம்.

500 படிகட்குமேல் வாங்கிக்கொள்பவருக்கு அவர்தம் முகவரி களும் அச்சிட்டுத் தரப்பெறும்.

அஞ்சற் செலவுட்பட விலை	100 — உரு.	2-00
	1000 — ,,	15-00

—அமைச்சர்

கேழ்வரகின் (எலுசின் கொரகானு Gaertn) முளைப்புத்திறனும். இளமை மிடுக்கும்.

மூலம்:
இரா. கலியப்பன்,
எம் இராமச்சந்திரன்,
அருணு இராசகோபாலன்.

தமிழில்:
எழிற்செல்வன்.

தோற்றுவாய்: பயிர்களின் வளர்ச்சியில் உப்பு நிலையின் விளைவு வளர்ச்சிக் கட்டத்தைப் பொறுத்து வேறுபடும். வளர்ச்சியின் பிந்திய கட்டங்களில் உப்பு நிலையை எதிர்த்தாளும் (Resistance) பயிர்களும் கூடத் தொடக்கத்தில் மிகுதியாக இலக்காகின்றன (Suceptible). உப்பு நிலைக்கு (Salinity) இளம்பயிர் பூண்டுள்ள உணர்வுத்தன்மையால் (Sensitivity) நாற்றின் சீரற்ற வளர்ச்சியும், நலிந்த வளர்ச்சியும் நிகழ்கின்றன. உப்பு நிலையில் பயிர்களின் கெச்சத்தை (response) இளமைக் காலத்தில் அறியும் அறிவு எதிர்கால ஆராய்ச்சிப் பணிகளுக்கு ஒளியூட்டுவதாக அமையும். பொதுவாகக் கேழ்வரகு (எலுசின் கொரகானு–Eleusine Coracana) உப்பு நிலையை எதிர்த்தாளும் திறம் பெற்ற பயிர் எனக் கருதப்படுகின்றது. பயிரின் இளமை மிடுக்கு முளைப்புத்திறம் ஆகியவை பற்றிய அறிவு, அப்பயிரின் வளர்ச்சி நிலைபற்றிய (நிலத்தில்) பயனுள்ள செய்தியை அளிக்கும். இந்த (கட்டுரையின்) நுழைபுலம் (investigation) கேழ்வரகின் மூன்று வகைகள் வேறுபட்ட உப்பு நிலைகளில் கொள்ளும் வளர்ச்சி நிலைகளைப்பற்றியதாகும்.

முன் ஆராய்ச்சிகளில் கண்ணோட்டம் (Review of literaure): உயர்ந்த உப்பு நிலையில் பயிர்களின் முளைப்பு காலத் தாழ்த்தம் அடைவதோடு முளைப்புத்திறன் விழுக்காடும் குறைந்துள்ளதும் அயர்ஃச், கேவர்ட்ஃட் (1946) ஆகியோரால் அறியப்பட்டுள்ளன. ஐயங்கர், (1965) மற்றோர் மிகையான உப்புச்செறிவு (கடல் நீரில்) விதைகளின் முளைப்பிற்குத் தடையானதை அறிவிக்கின்றனர். இது குறிப்பிட்ட அயனிவிளைவால் (Ionic effect) ஏற்பட்டது. அஃதோடு நல்ல நீர்கலக்கப்பட்ட கடல்நீரில் இந்த அயனி விளைவு ஊடுமை விளைவை (Osmotic effect) உயராண்மை (Super impose) கொள்கின்றது. உப்பு நிலையின் விளைவு வகைக்கு ஏற்றவாறு மாறுவதும் காணப்பட்டுள்ளது நெல் (ஒட்டா யூசி; 1953) கோதுமை, மொக்கைச் சோளம் (மக்காச் சோளம்),பருத்தி

(வகாப்ஃப், 1961) கம்பு, சோளம் (அப்ஃபிச்சண்டானி, ப்ஃபட் 1965) ஆகிய பயிர்களில் கொண்ட ஆய்வுகளால் வகை வேறு பாடு அறியப்பட்டுள்ளது. பாலசுப்பிரமணியம் (1965) நெல் வகைகளில் மேற்கொண்ட ஆராய்ச்சியில், ஒவ்வொரு வகையின் மொத்த முளைப்புத்திறன் உப்பு அளவுகளால் கட்டுப்படுத்துவ தாகவும், கூடுதல் உப்பு அளவுக்குச் சரியாக முளைப்புத்திறன் குறைவதாகவும் முடிவு அறிவிக்கின்றார். நாற்றின் வளர்ச்சியி லும் இவ் விளைவுகளே காணப்பட்டுள்ளன. சூரியன், ஐயங்கார் (1966) ஆகியோர் எள் விதைகளில், கடல்நீரின் மிகையான அளவு உப்பால் முளைப்பு காலத்தாழ்த்தமுற்றது அல்லது தடுக் கப்பட்டதாகக் கண்டுள்ளனர். இதற்குக் கடல்நீரில் உள்ள அய னிகளின் நஞ்சு விளைவுகளே வயணம் (attributes) அன்றி, ஊடகத்தினின்று (medium) விதையால் உறிஞ்சப்படும் நீரின் அளவு இல்லையெனச் சொல்லப்பட்டுள்ளது.

பொருட்களும் கருவிகளும் (Materials and methods): உப்பு நிலையின் விளைவுகளை அறியும் இம்முனைப்பிற்குக் கேழ்வரகின் (எலுசின் கொரகாணு) மூன்று வகைகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. அவை கோயம்புத்தூர்: 7, கோயம்புத்தூர்: 8, எலுசின் கொரகாணு வெள்ளை: 840 ஆகியவை. விதைகள் பளிங்கத்தாலான வட்டாக் களில் (Petridish), வட்டாவிற்கு 100 வீதம் விதைக்கப்பட்டன. வட்டாக்களில், 250 சீரெடை (Gram) மண் (2 கீழ் ஆயிரக் கோல் அளவு துளையுள்ள சல்லடையால் சலிக்கப்பட்ட மண்) விதைப்புக்கு முன்பு போடப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மண்: செவ்வண்டல் (Red loam); காரக்காடி நிலை (pH) 7.6; மின் கடத்தல் (E.C.) 0.60 கீழ் ஆயிரமோசுகள்/கீழ் நூறுகோலுக்கு (Millimhos per centimeter). ஆராய்ச்சிக்குக் கட்டுப்பாட்டோடு நான்கு உப்பு அளவுகள் கொள்ளப்பட்டன. அவை கீழ் வருவன: (1) கட்டுப்பாடு (மழைநீர்), 2000 பங்கு உப்பு (பத்து இலக்கத் திற்கு) (3) 4000. ப. ப. இ. (4) 6000 ப. ப. இ. (5) 8000 ப.ப இ. மொத்த முன்னுறல்கள் (Replications) மூன்று விதைகளுக்கு ஊடகமான மண்ணிற்கு அளிக்கப்படும் உப்புக்கரைசல், மழை நீரில் சம அளவு உவரப்பாசிதையும் (Na cl), சுண்ணப்பாசிதை யும் (Calcium chloride) கொண்டு செயற்கையாக ஆக்கப்பட் டவை. இதில் மழைநீரில் உள்ள மொத்தக்கரையும் உப்பு (T.S S)

அளவான 300 ப. ப. இ. யும் கணக்கில் கொள்ளப்பட்டது. பாசனம் நடத்தங்களுக்கு ஏற்றவாறு உப்புக்கரைசலாக அளிக்கப் பட்டன. பாசனம் தேவையான அளவு அமையுமாறு மண்ணின் ஈரநிலை கருத்தில் கொள்ளப்பட்டு அளிக்கப்பட்டது. இந்த ஆய்வு (experiment) பளிங்கு அகச் (Glass house) சூழ்நிலையில் 10 நாட்கள் வரை மேற்கொள்ளப்பட்டது. நாற்றின் தண்டு உயரம், வேர்நீளம், மொத்த முளைப்புத்திறம் ஆகியவை அறியப்பட்டன. நல்ல முளைவேர் (radicle) கொண்ட நாற்றுகள் மட்டுமே முளைப்புத்திறம் கொண்டவையாகக்கணக்கிடப்பட்டன

முடிவும் ஏரணமும் (Result an dDiscussion): உப்புநிலையில் முளைப்புத்திறன் விழுக்காட்டினை அட்டவணை 1இல் உள்ள மூலக் குறிப்புகள் (Data) காட்டுகின்றன.

அட்டவணை 1. (எண்கள் விழுக்காடு அளவில் உப்புநிலையில் முளைப்புத்திறம் (Germination)

எண்	நடத்தங்கள் / வகைகள்	மழைநீர் 300 ப.ப இ. (ந. 1)	2000 ப.ப.இ. (ந 2)	4000 ப.ப.இ. (ந 3)	6000 ப.ப.இ. (ந 4)	8000 ப.ப.இ. (ந 5)
1	சேழ்வரகு கோ. 7. (வ. 1)	98.5	95.0	8 .0	45.0	26.0
2	,, கோ. 8. (வ. 2)	91.0	89.0	70.0	27 5	6.5
3	,, எ.கெ.வெ. 840 (வ. 3)	97.0	84.0	66.0	42 5	14 5

சிறப்பு, ஊக அளவு = 0.05 வகைகள், நடத்தங்கள் இடைவினை (Significant at Prosalitylevel) (interaction) ஆகியவற்றிற்கு

நிறுத்தவறு (Standard error): 1.96,

அத்துமாறுபாடு (Critical difference); 5.91

முடிவு —

வகைகள் (Varities)

நடத்தங்கள் (Treatments)

கோ. 7. ந.1, ந.2, ந.3, ந.4, ந.5

கோ. 8. ந.1, ந.2. ந.3, ந.4, ந.5

மழைநீர் வ 1. வ.3, வ 2

2000 ப ப.இ. வ.1, வ 2, வ.3

4000 ,, வ.1, வ.2, வ 3

6000 ,, வ.1, வ.3, வ.2

எ. கோ. வெ. 840. ந.1, ந.2, ந.3, ந.4, ந.5
8000 ,, வ,1, வ.3, வ.2

நாற்றின் தண்டு உயரம், வேர்நீளம் ஆகியவை முறையே அட்டவணைகள் 2,3இல் காட்டப்பட்டுள்ளன.

அட்டவணை 2.

உப்பு நிலையில் நாற்றுகளின் (பத்துநாள் வளர்ச்சி) உயரம் (எண்கள் கீழ் நூறு கோல்களில்)

எண்	நடத்தங்கள் / வகைகள்	மழைநீர் 300 ப.ப.இ. (ந.1)	2000 ப.ப இ. (ந.2)	4000 ப,ப.இ. (ந.3)	6000 ப.ப.இ (ந 4)	8000 ப.ப.இ. (ந.5)
1	கேழ்வரகு கோ.7 (வ.1)	3.95	3.05	2.78	2.23	1.59
2	,, சோ 8 (வ 2)	4.02	2.95	2.25	1.99	1.22
3	,, எ.கோ.வெ 840 (வ 3)	4.55	2.28	1 90	1.94	1.57

சிறப்பு நடத்தங்களுக்குமட்டும்
நிலைத்தவறு: 0 22 அத்துமாறுபாடு 0.44
முடிவு: ந.1, ந 2 ந 3, ந 4, ந 5

அட்டவணை 3.

உப்புநிலையில் நாற்றுகளின் (பத்துநாள்வளர்ச்சி) வேர் நீளம் (எண்கள் கீழ் நூறுகோல்களில்)

எண்	நடத்தங்கள் / வகைகள்	மழைநீர 300 ப ப.இ	2000 ப.ப இ	4000 ப.ப.இ.	6000 ப.ப.இ.	8000 ப.ப.இ.
1	கேழ்வரகு கோ.7	14.65	15.20	12.86	9.75	7.45
2	,, கோ.8	16 10	17.60	13.85	10.30	6.65
3	,, எ கே.வெ 840	14.10	13 25	13.20	11.95	7.77

சிறப்பு, நடத்தங்கள், இடைவினை ஆகியவற்றிற்கு

நிலைத்தவறு = 0.69 அத்துமாறுபாடு = 2.09

முடிவு: கோ 7 ந.2, ந.1, ந 3, ந 4, ந.5

கோ.8 ந.2, ந.1, ந.3, ந.4, ந.5

எ.கொ.வெ.840. ந.1, ந 2, ந 3, ந.4, ந.5

மேற்காட்டப்பட்ட அட்டவணைக் குறிப்புகளினின்று வேர் நீளம், தண்டு உயரம் ஆகியவை உப்பு விளைவால் சிறப்பாகக் குறைவுற்றுள்ளது கண்கூடு.

நாற்றுக்குப் பயன்பட்ட ஊடகத்தின் மின்கடத்தல் (Electric Conductivity) தன்மை மிகையான உப்பு அளவால் அளவுக்கேற்றபடி உயர்ந்திருக்கின்றன. இந்த உயர்வு முளைப்புத்திறனையும், இளமிடுக்கையும் குறைத்துள்ளது. உப்பு அளவால் (நடத்தங்களால்) காரக்காடிநிலை (pH) வேறுபடுவதில்லை.

கேழ்வரகின் மூன்றுவகைகளும் உப்புநிலைக்கு உணர்வு கொண்டவை என்பதை முளைப்புத்திறன் காட்டுகின்றது. ஒவ்வொரு நடத்தமும் கோ.8 தவிர பிறவற்றில் முளைப்பைத் தனித்தனியே மேலாள்கின்றது. கோ.8இல் மழைநீர் பெறும் நடத்தமும், 2000 ப.ப.இ. பெறும் நடத்தமும் ஒரே கோட்டின் கீழ்வருகின்றன. கோ.7, கோ.8, எ. கொ. வெ. 840 ஆகிய வகைகள் 4000 ப.ப.இ. உப்பு அளவில் முறையே 87.3, 76.9, 68.0 விழுக்காடு முளைப்பு (Germination) கொண்டுள்ளதால் அந்த அளவுவரை (4000 ப.ப.இ.) முளைப்பு மிகையாகக் கேடுறவில்லை என்பதை நோக்கலாம். உப்பு நிலைக்கு வகையின் கெச்சத்தை (Response)ப் பொறுத்த அளவில் கோ.7 மிகுதியான முளைப்பும் தொடர்ந்து எ.கொ வெ. 840, கோ 8 எனவும் இடம் பெறுகின்றன. கோ.8 வகை, எ.கொ.வெ. 840ஐ விட உயர்ந்த முளைப்புத்திறத்தை 2000 ப.ப.இ., 4000 ப.ப.இ. ஆகிய நடத்தங்களில் (Treatments) பதிவு செய்திருப்பினும் எ.கொ.வெ. 840 வகையோடு நேர்கொண்டுள்ளது. எல்லா வகைகளிலும் தண்டு உயரமும், வேர் நீளமும் உப்புச் செறிவால் (Concentration) குறைவுற்றுள்ளன. இவற்றில் வகையால் விளைந்த வேறுபாடு புள்ளியியல்வழி சிறப்புப் பெறவில்லை. எ.கொ.வெ. 840 வேர் நீளம் 4000 ப.ப.இ. வரை குறைவுறவில்லை. முளைப்பு, வேர்வளர்ச்சி, தண்டு உயரம் ஆகியவற்றில் உப்புநிலையின்

தீயவிளைவுகள் மண்கரைசலின் (Soil solution) ஊடமைச்செறிவு (Osmotic Concentration), உப்புகளின் அயனி விளைவு (Ionic effect) வயணங்கள் (attributes).

இந்தக் கண்டுபிடிப்பு ஃப்பெர்ன்ஃச்மீன் (1962) அவர்களின் முடிவுவழி அமைகின்றது. பல்வேறு பயிர்களில் முளைப்பு, பயிர் வளர்ச்சி ஆகியவை உப்புநிலையால் குறைவுபட்டதாக அறிவிக்கின்றார். ஃகேவர்ட்ஃட் (1948) அவர்களும் மிகையான உப்பு அளவில் முளைப்பு அளவு குறைந்ததைக் கண்டுள்ளார். பாலசுப்பிரமணியம் (1965) அவர்கள் நெல்லின் எதிர்த்தாளும் ஆய்வு வகைகளும் (Strains) உப்பு நிலையால் குறைவுபட்டதைக் கண்டுள்ளார். அப்ஃபிச்சண்டானி, ப்ஃபட் (1965) ஆகியோரும் கம்பு (பெனிசிட்டம் டைபாய்டஃச்) சோளம் (சொர்கம் வல்கேர்) ஆகிய பயிர்களில் இத்தகு முடிவுகளையே அறிவிக்கின்றனர்.

இறுவாய்: உப்புநிலையில் கேழ்வரகின் மூன்று வகைகளான கோ.7, கோ.8, எ.கொ.வெ. 840. ஆகியவற்றின் முளைப்பு (Germination), இளமை மிடுக்கு (Early vigour) ஆகியவற்றை அறியஓர் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. முளைப்பு, தண்டு உயரம், வேர் நீளம் ஆகியவற்றிற்கான மூலக்குறிப்புகள் (Data) மூன்று வகைகளும் உப்புநிலைக்கு இலக்கானதைக் காட்டுகின்றன. விதைகளின் முளைப்பு, 6000 ப.ப.இ. உப்பு பெறும் நடத்தத்திலும் அதற்குமேலும் தெளிவாகக் குறைகின்றது. மூன்று வகைகளில் கோ.7. இளமையில் நன்கு ஏற்றுளும் (tolerance) திறம் கொண்டதெனக் காணப்பட்டுள்ளது. முடிவாகக் கேழ்வரகின் மூன்று வகைகளிலும் முளைப்பும், இளமை மிடுக்கும் உப்புநிலையால் குறைவுறுகின்றன. முளைப்பு, உப்பு அளவு 4000 ப.ப.இ. வரை நிறைவளிப்பதாக உள்ளது. கோ.7. வகை ஒப்புநோக்காக முளைப்பிலும், இளமை மிடுக்கிலும் மற்ற இரு வகைகளைவிட உப்புநிலைக்கு நல்ல வகையாகும். O

தென்மொழி, கடலூர்-1.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	9 உருபா	10-50 உருபா	13 உருபா.
தனிஇதழ்:	75 காசு	90 காசு	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஒரிதழுக்கு ஓர் உருபா முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

சிந்துவெளியும் திரவிடப் பண்பாடும்

வை. தட்சிணமூர்த்தி, மு. க. தமிழ்த்துறைத் தலைவர்,
சரசுவதி நாராயணன் கல்லூரி, மதுரை.

11. சிவனே முதற்கடவுள்: சிந்துவெளியில் கிடைத்த குறிகள் மற்றும் மேற்கண்டன சர். சான் மார்சல், ஈராசு அடிகள், முதலிய அறிஞர்எல்லாரும் கூறியபடி பழைய சிந்துவெளிச் சமயம் சிவனை முதற்கடவுளாகக் கொண்டனவன்றி, இன்று தமிழகத்தில் வழங்கும் கன்னிவழிபாடு மாரியம்மன் வழிபாடு போன்ற நிலமகள் வழிபாடு முதலியனவும் உடையதாக இருந்தன என்பதும் உறுதிப்படுவதோடு, வேதகால வழிபாட்டுக்கும் சிந்துவெளி வழிபாட்டுக்கும் 'தொடர்பில்லை என்பதும் உறுதிப்படுகிறது. மறுபிறப்பு நம்பிக்கை சிந்துவெளி மக்கட்கு உண்டு என்பதை அறிஞர்கள் பலர் மெய்ப்பித்துள்ளனர். வேதத்தில் மறுபிறப்புச் செய்தி நவிலப்படவில்லை.

12. எழுத்து வெட்டுக்கேற்ற விளக்கங்கள் சில: சிந்துவெளி எழுத்துகளை நன்கு ஆய்ந்து எழுதியுள்ள ஈராசு அடிகளாரின் கருத்துகள் செம்மையுடையனவாகவே தென்படுகின்றன. பண்டைத் திரவிடத்தின் வழி எழுந்த பிராமி எழுத்து தமிழ் சமற்கிருத இருவழிகட்கும் வழக்குப் பெற்றுள்ளது. ஈராசு அடிகளாரின் கருத்துப்படி கடவுள், ஆள், குரங்கு என்ற மூன்றையும் குறிக்கும் ஓவிய எழுத்தைப் பார்க்கும்போது அம்முறை திருக்குறளில்கூறும் மெய்யறிவுமுறைக்கு ஒத்ததாகத் தோன்றுகிறது. வானுறையும் தெய்வம், குடிமகன், விலங்கு என்ற மூன்று நிலைகள் உள. "வையத்து வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வமாகிறான்[38]. இலங்குநூல் கல்லாதவன் விலங்காகிறான்[39]. பயனுள்ளவற்றைப் பேசுபவனும் செய்பவனும் மகன் எனப்படுவான்[40] என்பன குறள் கருத்துகள். ஆள் என்பதைக் குறிக்கும் எழுத்து மேற்குறி பெற்றுக் கடவுள் ஆதலும், கீழ்க்குறி பெற்று குரங்காதலும் மெய்யறிவு முறையிலமைந்த எழுத்து முறையைக்

38. குறள் 50
39. குறள் 410
40. குறள் 196

காட்டுகின்றன[41]. உயிர் மெய் என எழுத்துப் பிரிப்பிருப்பதும் இது குறித்தே எனப் பண்டை உரையாசிரியர் மொழிவர்[42].

13. வேல், உழவன் என்ற சொற்கள் மன்னனைக் குறித்தனவாகக் குறிக்கப்படுகின்றன[43]. "மும்முகக் குடே வேலாள் வேலாள் வேலாள்கொடி" எனவரும் எழுத்து வெட்டில் வேலாளர்க்குக் கொடி கூறப்படுகின்றது[44]. திருவள்ளுவர் இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்வதற்கே என்கிறார்[45]. வேளாளர் என்ற சொல்லுக்கு உதவி செய்தல், பயிர்த் தொழில் செய்தல் என்ற இருபொருள் உண்டு[46]. குறளில் அரச இனம் என்று ஒன்று கூறப்படவில்லை வேளாண்மையுடையரே அரசர் என்றும், வேலாள் வெற்றியையுடையவர் என்ற சொல்லுக்கு உழைப்பவர் என்றும் பொருள். மக்கள் நன்மைக்கு உழைப்பவரே மன்னன் என்ற பொருளில் உழவன் என்ற சொல் மன்னனைக் குறித்திருக்கலாம். "அது தாலி பேர் மீன் ஓரிட எட் கடவுள்" என்ற எழுத்து வெட்டில் எட்டுக் கடவுள் என்று குறிப்பிடப்படுகின்றது[48]. எண் குணத்தான் என வள்ளுவர் கூறுவதோடு இஃது ஒத்து வருகின்றது[49]. "ஏல் கா ஆள் எட்டுட அது" என்ற எழுத்து வெட்டில் மாந்தன் ஒருவனின் எட்டு உடைகள் என்பதில் உடை என்பது மாந்த உடலைக் குறிப்பதாகவும், எட்டுடல் என்றதால் மாந்தன் இதற்கு முன்பே ஏழுமுறை இறந்து எட்டாவது உடல் இப்பொழுதுள்ளது என்றும் கருத இடமுள்ளது. இதனை எழுமை எழு பிறப்பும் என்ற குறளோடு ஒப்பிட்டுப் பார்க்கலாம்[50]. திருக்குறளில் குறிக்கப்படும் யாழ் குழல் என்ற இரண்டு இசைக் கருவிகளில் யாழ்

41. Rev. Fr. Heras SJ. Proto Indo Mediterranean culture p. 68
42. தொல். எழுத். நச். உரை.
43. Rev. Fr. Heras p 96
44. ,, p 97
45. குறள் 81
46. கழகக்கையகராதி
47. குறள் "வேலன்று வென்றி தருவது" 546
48. p 98 Rev. Fr. Heras
49. குறள் 9
50. குறள் 62, 107

சிந்துவெளி எழுத்துகளில் இடம் பெற்றுள்ளது[51]. மீனவன், மீன் என்ற சொற்கள் ஐயத்திற்கிடமின்றி மிகுதியாகக்காணப்படுகின்றன. தமிழ்த் தொன்மைக்குக் குறியான பாண்டியர் பற்றிய தொடர்பு இதற்கு உண்டோ எனக் கருதலாம்.

14. தாமிழி ஒப்பு: தோற்ற அளவில் பிராமி எழுத்துகட்கும் சிந்துவெளி எழுத்துகட்கும் உறவு தெரிகின்றது. தாமிழி, எழுத்து என்ற பெயரால் திரு. சா. கணேசன் குறிப்பிட்டுவரும் முறையான எழுத்து வளர்ச்சியோடு இதனை ஒப்புப் பார்த்தால் பயன் கிடைக்கலாம்.

15. மணியும், குளமும்: சிந்துவெளியில் மணிகள் முதலியன அறுக்கப்பட்ட வேலைப்பாடுகளுடன் கிடைத்துள்ளன. சிலப்பதிகாரத்தில் மணி அறுவைப் பணி செய்வோர் தெரு குறிப்பிடப்பட்டுள்ளது[52]. திரு வித்யாதர்மகாசன் என்பவர் "சிந்துவெளி மக்கள் குளிப்பதற்கு மிகுந்த முதன்மை தந்தனர்" என்று குறிப்பிடுகிறார்[53]. குளிக்கும் குளத்தின் அமைப்பே இக்கூற்றுக்குக் காரணம். குறளில் "புறந் தூய்மை நீரான் அமையும்" எனக் கூறப்பட்டுள்ளதும் கருதத்தக்கது[54].

16. திரவிட முன்னோர்: சிந்துவெளி மக்கள் எருதை வணக்கத்துக்குரியதாகக்கருதியுள்ளனர். வேதத்தில் எருது பலியிடப்பட்டது குறிப்பிடப்பட்டுள்ளது[55]. வேதத்தில் மறு பிறவி பற்றிய கருத்தே இல்லை[56]. பிற்கால நூல்களில் மறுபிறவி பற்றிய குறிப்பு வருகின்றது. பிற்காலத்தில் வேதநெறியினர் புலால் மறுத்தமைக்குக் காரணம் சிந்துவெளி மக்களிடமிருந்த விலங்கு வழிபாட்டை உணர்ந்ததாக இருக்கலாம். மேலும் மறுபிறவி நம்பிக்கை வந்ததும், நம் உறவினரே விலங்காகப் பிறந்திருக்கலாம்; அவர்களையே உண்ணுதல் தகாதெனக் கருதியிருக்கலாம்[57]. வேதத்தில் எழுத்து பற்றிய செய்தி ஒன்றும்குறிப்

51. p 179 Rev. Fr. Heras
52. சிலப்பதிகாரம் ஊர்காண் காதை 190-200
53. Vidhyadhar Mahajan. Ancient India p. 43
54. குறள் 298
55. J. Murdoch Account of the Vedas p 57
56. ,,
57. ,,

பிடப்பட்டதில்லை என்பதை வைத்தும்[58], வேதம் ஓதப்பட்டதே அன்றி எழுதப்பட்டதன்று என்ற கருத்தை வைத்தும் வேத நெறி ஆரியர் சிந்துவெளி மக்களிடமிருந்தே எழுதக் கற்றிருக்க வேண்டும் என்று கருதலாம். வேதத்தில் நவிலப்பட்ட தீ வழிபாடு, வேள்வித் தீ முதலியன பற்றிய செய்தி ஏதும் சிந்துவெளி முத்திரைகளில் காணப்படவில்லை என்பதையும் நோக்கலாம். வேதத்தில் பெண்களைத் தாழ்வாக மதித்த குறிப்புகள் உண்டு[59]. இந்திரன் தன் வாயால் "பெண்ணின் அறிவு ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்டதன்று. அவளது அறிவுக்குக் குறைந்த தகுதியே உண்டு" என்று கூறியதாகக்கூறப்பட்டுள்ளது[60]. சிந்துவெளியில் பெண் தெய்வ வழிபாடு இருந்துள்ளது. திராவிடர்கள் பெண்மைக்குத் தலைவணங்குபவர்கள் என்பது இலக்கியங்களின் வழித் தெரிகின்றது. சிந்துவெளி நாகரிகத்தில் காணப்படும் அத்தகைய மேம்பாடு இரிக் வேதத்தில் வெளிப்படவில்லை. இரிக் வேதத்தில் பெரும் கோட்டையும் செல்வங்களும் உடைய மக்களோடு போரிட்ட வரலாறு பல பாடல்களில் தென்படுகின்றது. மேலும் கூறப்போனால் இரிக் வேதத்தில் பேராவல், தன்னலம் முதலிய குறிப்புகள் வெளிப்படுகின்றன. திரவிடர் பண்பாடு இதற்கு மாறாக அன்பு, இன்றுமை வயப்பட்டது. சிந்துவெளி மக்களிடம் காணப்படும் அமைதியான தொழில் வாழ்க்கை, போர்க் கருவிகள் மிகுதியும் கிடைக்காமை முதலியவற்றோடு இரிக் மறையில் கூறப்படும் பேராவல் வாழ்வு, போர்வெறி, வணிக நோக்கிலமைந்த வழிபாடு முதலியவற்றை நோக்கும்போது, திரவிட ஆரியப் பண்பாட்டின் அடிப்படை வேற்றுமையை அறியலாம். எனது இச்சிறு செப்பமற்ற கட்டுரை தமிழ் இலக்கியவழி சிந்துவெளிப் பண்பாட்டை ஆராய வழியுண்டு என்பதைக் காட்டச் செய்த முயற்சியின் முதற்படியே என்று கூறி முடிக்குதும் O

58. 59. J. Murdoch Account of the Vedas p 21
60. Rigveda VIII 3317
61. Rigveda Mandala I Hymn 103 to Indra:
"Armed into his bolt and trusting in this Prowess
he wandered shattering the Dasa's cities
Cast tery dart, knowing, thunderer at the Dasya
increase the Arya's might and glory, Indra"
Rigveda Mandala-III Hymn 48
"Cell me on Maghavan, auspicious Indra
best hero in the fight when spoil if gathered
The strong who listens who gives aid in battles
who slays the vrithras wins and gathers riches"
Mandala VII Hymns 75
"With bowlet us win kive, with cow the battles,
with bow be victors in our hot encounters
The bow brings grief and sorrow to the foe man
armed into the bow we subdue all regions".

முக்கூடற் பள்ளு

– கு. ஐந்தெழுத்தன், க இ., கீ. க இ.

இலக்கியம் வாழ்க்கைக் கண்ணாடி; நிலையற்ற பொருள்களுக்கு நிலைத்த வாழ்வு தரும் சாகாமருந்து பண்டைக்காலத்து வேந்தர்கள், வள்ளல்கள் போன்றோரது உண்மை உருவைக் காட்டும் ஒளிப்படம்.

இலக்கியம் இருவகைப்படும். அவை பேரிலக்கியம், சிற்றிலக்கியம் என்பன. இவற்றுள் பேரிலக்கியத்தைக் ''காவியம்'' எனவும், சிற்றிலக்கியத்தைப் ''பிரபந்தம்'' எனவும் வடமொழி நூலார் வழங்குவர்.

பள்ளு சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. உலகுக்கு உணவு வழங்கும் உழவர்-உழத்தியரது வாழ்க்கையைப் பொருளாகக் கொண்டது. கற்றோரே யன்றி மற்றோரும் அறிந்து இன்புறுமாறு எளிய நடையில் இயற்றப்படுவது.

இனி, பள்ளு என்னும் இலக்கியத்தின் வரலாற்றை ஆராய்வோம். தொல்காப்பியச் செய்யுளியலில் நூல்களுக்கு உரிய எட்டு வனப்புகள் கூறப்பட்டுகின்றன. இவற்றுள் ''புலன்'' என்பதும் ஒன்று. இதை விளக்கப் புகுந்த ஆசிரியர் தொல்காப்பியனார்,

''சேரி மொழியாற் செவ்விதிற் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலனென மொழிப பொருளுணர்ந் தோரே''

என்கிறார். இந்நூற்பாவிற்கு, இளம்பூரணர் என்னும் உரையாசிரியர் ''வழக்குச் சொல்லினானே தொடுக்கப்பட்டு ஆராய வேண்டாமற் பொருள் விளங்குவது புலன் என்னும் செய்யுளாம்'' எனப் பொருள் கூறுகின்றார். இந்தப் ''புலன்'' என்னும் அழகுபெற்று அமைந்த நூல்களே பள்ளு இலக்கியங்களுக்கு வழிகாட்டிகள் என்று கூறலாம்.

பன்னிருபாட்டியலில் ''உழத்திப்பாட்டு'' என்ற ஒருவகை இலக்கியம் குறிக்கப்படுகின்றது. இது மன்னனை வாழ்த்தி உழவுத்தொழிலைக் கூறும் பத்துப் பாட்டுகளைக் கொண்டது. பள்ளிலிருந்து இது வேறுபட்டது; என்றாலும், பிற்காலத்தில் விரிவுபடத் தோன்றிய பள்ளுக்கு வழிகாட்டியாக இருந்திருத்தல் கூடும். கி. பி. பதினான்காம் நூற்றாண்டில் தோன்றிய நவநீதப் பாட்டியலிலும், அதற்குப்பின்

வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியிலும் உழத்திப்பாட்டின் இலக்கணம் கூறப்படுவதுடன், உழத்திப்பாட்டும் பள்ளும் ஒன்றேயென்பதும் குறிக்கப்படுகின்றது.

கி. பி. 17-ஆம் நூற்றுண்டிற்குப் பிறகுதான் இவ்விலக்கியத்தின் தெளிவான வரலாறு காணக்கிடக்கின்றது, முடியுடை மூவேந்தர் மரபு அழிந்து பல நூற்றுண்டுகள் ஆயினபின், அரசியற் குழப்பங்களால் அமைதியற்றிருந்த தமிழ்நாடு நாயக்க மன்னரது ஆட்சியிலும், அவர்களுடைய படியாளர்களின் (பிரதிநிதிகளின்) ஆளுகையிலும் ஒருவாறு அமைதியுற்று வாழத் தொடங்கியது. இடையே நிகழ்ந்த குழப்பங்களால், சிறப்பு மிக்க இலக்கிய மரபு தடைப்பட்டு விட்டது. ஒப்பற்ற பெருந்தலைவன் ஒருவனைப் போற்றிப் பெரும்பாவியம் செய்வதில் புலவர்கட்கு ஊக்கம் இல்லாமற் போயிற்று. எனவே, அவர்கள் புதுமுறையில் நூல் செய்யப் புகுந்தனர். தமிழ்நாடு முழுவதும் பயிர் செய்வோர் மிகுந்திருந்தமையின், அவர்கள் வாழ்க்கையைப் பொருளாக வைத்துப் பள்ளு என்னும் இலக்கியத்தை உருவாக்கி விட்டனர்.

பள்ளர் (உழவர்) வாழ்க்கையைக் கூறுவதால் பள்ளு எனப் பெயர் வந்தது. பள்ளர் என்பார் இன்றும் திருநெல்வேலி, தஞ்சை, சேலம், கோவை முதலிய இடங்களில் பயிர்த்தொழில் செய்துவரும் வேளாண் மக்கள். இவருள் பெண்மக்கள் பள்ளியர் எனப்படுவர். பள்ளனும் அவன் மனைவியரும் பண்ணையானும் பள்ளில் தலையாய உறுப்பினர்கள்.

தமிழ்நாட்டு வழக்கில் உலவிவரும் பள்ளு நூல்கள் பலவாகும். அவை முக்கூடற்பள்ளு, குருகூர்ப்பள்ளு திருமலை முருகன் பள்ளு, வையாபுரிப் பள்ளு. சேற்றூர்ப் பள்ளு, தில்லைப் பள்ளு என்பன. இவற்றுள் இலக்கியச்சுவை மிகச் செறிந்துள்ளதும், மக்களிடையே பெருவழக்காயிருப்பதும் முக்கூடற்பள்ளே யாகும்.

முக்கூடல் என்பது திருநெல்வேலி மாவட்டத்தில் பொருநை (தாமிரவருணி) யாற்றின் வடகரையில் உள்ளதோர் சிற்றூர். சித்திரா நதி, கோதண்டராம நதி, பொருநை நதி என்னும் மூன்றும் கூடுமிடத்திலிருப்பதால், இவ்வூர்க்கு இப் பெயர் வழங்கலாயிற்று. இப்போது முக்கூடலுக்கு வழங்கிவரும் பெயர் "சீவலப்பேரி" என்பதாம்.

அடுத்து, முக்கூடற்பள்ளின் பொருளடக்கத்தைக் காண்போம். திருமால், கருடாழ்வார், சேனைமுதலிகள், நம்மாழ்வார் என்போர்க்கு வணக்கம் கூறி, நூல் தொடங்கப்படுகின்றது. பிறகு பள்ளியர் இருவரும் பள்ளனும் தோன்றித் தங்கள் குலப்பெருமை கூறுகின்றனர். பள்ளியர் தங்கள் நாட்டு வளமும் நகர்வளமும் பாடி, மழை பெய்யுமாறு கூவும்படி குயிலை வேண்டுகின்றார்கள். பள்ளர் எல்லாரும் திரண்டு மழை வேண்டிச் சிற்றூர்க் கடவுளருக்கு வழிபாடு நிகழ்த்துகிறார்கள். மழைக் குறிகள் தோன்றுகின்றன. மழை பெய்ததும், ஆற்றில் வெள்ளம் பெருகி, குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் ஐவகை நிலங்களிலும் பாய்ந்தோடுகின்றது. இதைக் கண்ட மூத்தபள்ளி, தன் கணவனான வடிவழகக் குடும்பன் ஆற்று நீரைப் பயன்படுத்தி உழவுத் தொழிலைச் செய்யாமல், மருதூர்ப்பள்ளியை மணந்து, அவள் வீட்டிலேயே அடங்கிக் கிடப்பதைப் பற்றிப் பண்ணையானிடம் முறையிடுகிறாள். பண்ணைக்காரன் மருதூர்ப்பள்ளியை வரவழைத்துக் கண்டிக்கிறான். இதன்பின், பள்ளன் வந்து பண்ணைக்காரனைக் காண்கிறான். பண்ணைச் செயலைச் சொல்லுமாறு பண்ணையான் கேட்க, பள்ளன் விதைவகை, மாட்டுவகை, மேழிவகை ஆகியவற்றைக் கூறி மீள்கிறான். பண்ணைக்காரன் சொற்படியே, வயலில் கிடை வைப்பதற்காக ஆட்டிடையனை அழைத்து வருகிறான். இடையனை வயலில் ஏவிவிட்டு மறுபடியும் இளையபள்ளி வீட்டிலேயே தங்கி விடுகிறான். மூத்தவள் மீண்டும் பண்ணையானிடம் முறையிடுவது தெரிந்து, பயிர்த்தொழிலில் நாட்டம் செலுத்துபவன்போல் நடிக்கிறான். பள்ளனது கள்ளத்தைக்கண்ட பண்ணையான் அவனைத் தொழுவில் அடைக்கிறான். பள்ளனின் துன்பத்தைக் கண்ட மூத்தவள் மனம் பொறுமல், தான் பிணைபட்டு அவனை மீட்கிறாள். விடுவிக்கப்பட்ட பள்ளன் விதைக் கணக்கு முதலியன சொல்லி, உழவரையெல்லாம் கூட்டிச் சென்று, நல்ல வேளையில் உழவைத் தொடங்கச் செய்கிறான். இந்நிலையில் அவனை ஒரு மாடு முட்ட மயங்கி விழுகிறான். பள்ளியர் வருந்தி நிற்கின்றனர். பின்னர்த் தேறி யெழுந்து தன் வேலையில் கருத்துச் செலுத்துகிறான். நாற்றுப் பறித்து நடவு முடிந்தபின், பயிர் நன்கு விளைகிறது. அறுவடை முடிந்ததும், விளைவைக் கணக்குச் செய்து, செலவு வகைகளுக்குப் பள்ளான் நெல் அளக்கிறான். தன்னைப் புறக்கணித்ததும் அன்றி, தனக்குரிய பங்கைப் பள்ளான் முறைப்படி தரவில்லை என்று மூத்தவள் பள்ளியர்முன் முறையிடுகிறாள். கேட்டிருந்த இளையவள் அவள்மீது சினங்கொள்ள, இருவருக்கும் இடையே

பூசல் உண்டாகிறது. ஒருவரை யொருவர் வசைமொழி கூறுகின்றனர். முடிவில், பள்ளியர் இருவரும் தாமே ஒன்றுபட்டுத் திருமாலை வாழ்த்துகின்றனர்.

இனி, இப் பள்ளு நூலில் அமைந்த சுவையான பகுதிகள் சிலவற்றைக் காண்போம்.

பள்ளனின் இளைய மனைவியான மருதூர்ப்பள்ளி தன் நாட்டு வளத்தைத் தெரிவிக்கிருள். அவளது நாடு சீவலமங்கை. "அந்த நாட்டில் காய்வது என்பது ஞாயிற்றின் வெயில் ஒன்றுமே; தன்னிலை குலைவது தயிர்த்தொகுதி யொன்றுமே; மாய்வன நாழிகையும் நாளுமே; சுழல்வது ஆற்றுநீர்ச் சுழியே; தளர்ந்து சாய்வது கதிர் முற்றிய செந்நெல் மட்டுமே; அடங்கி ஒடுங்குவது அறிவிற் சிறந்த முனிவர் உள்ளமே; தேய்ந்து மெலிவது அரைக்கப்படும் சந்தனக் கட்டையே."

இவ்வாறு கூறியதால், அந்த நாட்டில் மக்கள் எவரும் காயும் (சினங்கொண்டு கடுஞ்சொல் கூறும்) தன்மையுடையவரல்லர் என்பதும், துன்பத்தால் நிலைகுலையும் இயல்பு அவர்கள்பால் இல்லை யென்பதும், அந்நாட்டு மாந்தர் அழிவினை அறியார் என்பதும், வருத்தத்தால் மனச்சுழற்சி கொள்ளும் வழக்கம் அவர்கட்கு இல்லை என்பதும், உழைப்பு மிகுதியால் உடல்தளர்ச்சி கொள்ளார் என்பதும், வறுமை-பிணி போன்றவற்ருல் இளைத்து மெலிதல் என்றுமே இல்லை என்பதும் நன்கு புலப்படும். பாடலைப் பார்ப்போம்:

"காயக் கண்டது சூரிய காந்தி
  கலங்கங் கண்டது வெண்டயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
  மறுகக் கண்டது வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்க்குலைச் செந்நெல்
  தணிப்பக் கண்டது தாபதர் உள்ளம்
தேயக் கண்ட(து) உரைத்திடும் சந்தனம்
  சீவல மங்கைத் தென்கரை நாடே".

அடுத்து நாம் காண நிற்பது, முக்கூடல் நாட்டில் மழை பொழிவதைப் பற்றிய பாடல்; "காவுக்கிறைவனுகும்" என்ற தொடக்கம் உடையது, பாடற்பொருளைச் சுருக்கமாக இங்கு நோக்குவோம்:

தேவர்கோன் கட்டளைப்படி வானில் எழுந்த முகில் கடலில் படிகிறது; வானவில்லை வளைக்கிறது. இவற்றால் கடலில் பள்ளிகொண்டவனும், வில்லைக் கையில் ஏந்தியவனும் ஆகிய திருமாலுக்கு நிகராக உள்ளது. கலைமின்னோடு சேர்வதால் நான்முகனைப் போன்றிருக்கின்றது. இங்குக் 'கலைமின்' என்ற சொல்லை இருபொருள்பட அமைத்துள்ளார் ஆசிரியர். எனவே, கலைந்து செல்கின்ற மின்னலோடு சேர்ந்துள்ளது முகில் எனவும், நான்மகன் கலைமகளுடன் சேர்ந்துள்ளான் எனவும் பொருள் கொள்கிறோம். மேலும், தண்ணீரைத் தன்னகத்தே தாங்கி, மலைமீது தங்குவதால், கங்கையைச் சூடிக் கயிலை மலையிலுறையும் சிவனையும் ஒத்துள்ளது, அக் கருமுகில்.

இனி, மூத்த பள்ளியான முக்கூடற் பள்ளியும் இளைய பள்ளியான மருதூர்ப்பள்ளியும் பூசல் கொண்டு ஏசிக்கொள்ளும் வகை வேடிக்கையானது. இந்த ஏசல் இவர்கள் வணங்கும் கடவுளர்வரை செல்கிறது. முக்கூடலாள் வைணவப் பள்ளி. மருதூராள் சைவப் பள்ளி. இதனால், முக்கூடலாள் சிவனைக் குறைகூற, மருதூராள் திருமாலைப் பழிக்கிறாள்.

"நாலுமுழத் துண்டுகூட இல்லாமல், புலித்தோலை உடுத்தான் உங்கள் சிவன்" என்கிறாள் மூத்த பள்ளி. "இவ்வளவு தானே? அந்தப் புலித்தோல்கூட இல்லாமல் மரவுரி தரித்தானே, உங்கள் திருமால்!' என்று, திருமாலின் வடிவமான இராமன் சடைமுடித்து மரவுரியுடுத்துக் காடுசென்ற கதையைச் சுட்டிக் காட்டுகிறாள், இளையபள்ளி.

"வேறுணவு ஏதும் கிடைக்காமல், நஞ்சையுண்டானே, உங்கள் நாதன்!" என்கிறாள் முக்கூடற்பள்ளி. "அது கிடக்கட்டும், சோற்றுக்கு வழியில்லாமல், மண்ணைத் தின்றானே உங்கள் கண்ணன், மறந்துவிட்டாயா?" என்று மறுமொழி தருகிறாள் மருதூர்ப்பள்ளி.

"போயும் போயும், மாட்டை ஊர்திபாகக் கொண்டு அதன்மீது ஏறித்திரிகிறானே, உங்கள் இறைவன்" என்று பழித்துக் கூறுகிறாள் வைணவப்பள்ளி. "போதும், நிறுத்து. உங்கள் கடவுள் கருடன் என்னும் பறவை மீதல்லவோ ஊர்ந்து செல்கிறான்? கருடனைவிடக் காளை எந்தவகையில் தாழ்ந்துவிட்டது?'! என்று எதிர்மொழி விடுக்கிறாள் சைவப் பள்ளி.

இனி, நூலில் அமைந்த பிற சிறப்புகளைக் காண்போம். ஒரு பொருளின் இயல்பைச் சிறிதும் கற்பனையின்றி, உள்ளவாறே கூறுதல் தன்மை நவிற்சி என்ற அணியாகக் கொள்ளப்படும். அவ்வாறு இந்நூலில் காணப்படும் இடங்கள் பல. சில கூறுவோம்:

முக்கூடலில் வாழும் பள்ளனை நம் கண்முன் நிறுத்துகிருர் பாவலர். ஆட்டுக்கடாவின் கொம்பு போன்று முறுக்கிய மீசை; வளைதடி சேர்த்து இறுக்கிய கச்சை செந்நிறப் புள்ளி போட்ட மேலாடை; கருநிறக் கொண்டை; மதுவெறியால் உதட்டில் தவழும் புன்னகை-இத்தகைய கோலத்தில் தோற்றம் அளிக்கிருன் பள்ளன்.

இதற்கு நேர்மாருகஇருக்கிறது பண்ணைக்காரரின் உருவம். பருத்தி மூட்டையைப்போலப் பருத்த தொந்தி; கீரை கடையும் மத்துப்போன்ற வழுக்கைத்தலை; சுரைவித்துப் போன்ற பற்கள்; ஈ மொய்க்கும் வாய்; அங்கொன்றும் இங்கொன்றுமாக மயிர் முளைத்துக் கிடக்கும் மீசை-இந்த அருவருக்கத்தக்க கோலத்தில் காட்சி யளிக்கிருர் அவர்.

அடுத்து, நாம் ஆராய வேண்டுவது புலவரின் உலகியலறிவு ஒருவர் எந்தத் துறைபற்றி நூல்செய்ய முற்பட்டாரோ, அந்தத் துறையில் பரந்த அறிவு பெற்றிருத்தல் வேண்டும். இல்லையாஞல் அந்த நூல் இயற்கைக்கு மாறுபட்டதாகவே தோன்றும். நம் புலவர் எடுத்துக்கொண்ட பொருள் உழவர் வாழ்க்கையைப் பற்றியது. இதற்கேற்ப, அத்துறையில் இவர் பெற்றுள்ள அறிவு வியத்தற்குரியது. மணல்வாரி, பூம்பாளை மச்சுமுறித்தான், திருமங்கை யாழ்வான், சொரிகுரும்பை, குலைவாழை முதலிய நெல் வகைகளைப் பள்ளனின் கூற்ருக வைத்துச் சொல்கிருர். மாட்டு வகை கூறும்பொழுது மயிலை, செம்பருந்து, ஒற்றைக்கொம்பன் முதலிய பெயர்களைக் குறிப்பிடுகிருர். இவ்வாறே பொருநையாற்றிலும் சித்திரா ஆற்றிலும் வெள்ளம் பெருகி வருவதைக் குறிப்பிடும்பொழுது. அந்தவெள்ளத்தில் பசலி, திருக்கை, கசலி, கெளுத்தி, மடத்தை, கடந்தை, குறவை,பறவை, வாளை, கோளை, மயிந்தி, அயிந்தி, கெண்டை, கெளிறு போன்ற மீன் வகைகள் துள்ளுவதாகக் கூறுகின்ருர்.

இந்நூலில் எதுகைநயம் அமைந்த இடங்கள் பல. எடுத்துக் காட்டாக, ஒன்று காண்போம்:

''வழங்கு மாறும் புறப்பட்டே-புனல்
முழங்கு மாறும் திறப்பட்டே

தானக்களிறு படிந்திடக்-கொலை
ஏனக்களிறு மடிந்திடத்
தழையின் ஆரம் உந்தியும்-பசுங்
கழையின் ஆரம் சிந்தியும்
கானக்குளவி அலையவே-மது
பானக்குளவி கலையவே''.

இறுதியாக, இப் பள்ளுநூலிற் காணப்படும் சந்தப் பாடற் பகுதியொன்றைப் புலப்படுத்துவோம். திருமாலுக்கு வணக்கம் கூறும் முதற் பாடல் அது:

''மணிமரகதச் சோதியர் ஆதியர்
மனுமரபினிற் காவலர் கோவலர்
மறைமுதல்வர்முக் கூடலர் ஏடலர் —வாசத் துளவோர்
அணியரவணைத் தூயவர் மாயவர்
அடியவர்மனப் பூரணர் காரணர்
அழகர்பளிசைப் பாவள நாவள —மாகத் தருவோர்''

இப்பாடல்,

தனதனதனத் தானன தானன
தனதனதனத் தானன தானன
தனதனதனத் தானன தானன —தானத்தனஞ

என்ற சந்தத்தைத் தழுவியது.

மக்கள் இலக்கிய மாகிய இத்தகு நூல்களைப் படித்துச் சுவை காண்பது தமிழறிவு வளர்ச்சிக்குத் துணைபுரிவதாகும். O

அறிவிப்பு.

பணவிடை, காசோலை வழியாகத் தொகை அனுப்புவோர், அமைச்சர் என்று மட்டுமே குறித்தல் வேண்டும். ஆசிரியர்க்கு அனுப்புவோர் ஆசிரியர் அல்லது பெருஞ்சித்திரனார், என்று குறிப்பிடுக. ஆங்கிலத்தில் எழுதுவோர் The Proprietor, Thenmozhi (Tamil chittu) Cuddalore-1. என்று முகவரியிடுக.

அமைச்சர்,
தென்மொழி, தமிழ்ச்சிட்டு.

மக்கள் வாழ்க்கை முறைகள் மிகவும் கீழான நிலையடையும்போது பெருந்தலைவர்களான இயேசு, புத்தர், காந்தி, நபிகள் நாயகம் போன்ற தலைவர்கள் தோன்றி மக்களை விழிப்புறச் செய்தனர். அது போலவே வடவரின் சூழ்ச்சிக் கைகளிலும் பார்ப்பனரின் – வஞ்சக எண்ணங்களினாலும் ஏமாளிகளாக இருக்கும் தமிழர்கள் தலை தூக்கிடவே தாங்கள் விடிவெள்ளிபோல் எனது கண்களுக்குத் தோற்றமளிக்கின்றீர்கள். பண்டையக் கழகஇலக்கியத்தின்மாண்புகளைத்தும் கொண்டதே ''நூறுசிரியம்''. அதற்கு எனது உளம் கனிந்த நன்றி. விடைத் திங்களிதழில் திரைப்படக் காரர்களைச் சாடியுள்ளீர்கள். இற்றைநாளைய திரைப்படங்கள் மக்கள்மனங்களில் மிகவும் கீழ்த்தர உணர்வுகளைத்தாம் தோற்றுவிக்கின்றன. இளைஞர் உள்ளம் பண்படத் திரைபடங்களின்நிலை இன்னும் உயர்வுறவேண்டும். போலிகளெல்லாம் தங்களைத் தலைவர்கள் என்று சொல்லிக்கொள்ளும் இந்நாளில் தென்மொழி விற்பனை மிகவும் குறைவுதான். தங்கட்கு இதில் வருவாய் இல்லையென்பது அங்கைநெல்லிக்கனியெனத் தெரிகின்றது. எனினும் எவ்வளவு இடர்ப்பாடுகள் வரினும் வளமான தமிழர் வாழ்விற்கு வழிகாட்டும் இத் தமிழ்ச்சுடரை அணைத்துவிடாதீர்கள். என்னைப்போன்ற பல்லாயிரக் கணக்கான தமிழகத்து இளைஞர்கள் என்றென்றும் நுங்கட்கு தோள்கொடுப்போம். அன்னைத்தமிழின் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். தென்மொழிபற்றி அறியாதாரிடத்தே தென்மொழியைப் பரப்புவேன். பன்னெடுங்காலம் உடல் நலமுடன் இலங்கித் தமிழ்த்தொண்டாற்ற என்றென்றும் திருவருளை இறைஞ்சுகின்றேன்.

– ந. பாலசுப்பிரமணியன், மங்கள இல்லம், நீடாமங்கலம்.

0 அன்புடைய ஐயா, வணக்கம் கன்னட மண்ணிலிருந்து தென்மொழிக்கு மடல்வரையக்கைகூசுகின்றது. ஏனெனில் பிழைமலிந்து கிடக்குமோ என்பதால். எனினும் துணிவுகொண்டு இதனை வரைகின்றேன்.

''பார்ப்பானின் வெற்றுடலில் பூணூல் விளங்கும்வரை, அந்நெஞ்சில் முற்றியுள 'சாதிமத' முட்காடிங்குள்ளவரை, அற்றை ''மனுநூல்'' அழியும்வரை– இந்நிலத்தே ஒற்றுமையும் பூக்காது; ஒருமையுள்ளம் காய்க்காது'' பொன்னிலே பொறிக்க வேண்டிய உண்மைக்கருத்துகள்.

தமிழ் நாட்டிலே பழமை மறுபடியும் வேரூன்றி விட்டது என்று திகைப்பிலேயும், ஏமாற்றத்திலேயும் வீழ்ந்துகிடந்த என்போன்றோர்க்குத் 'தென்மொழி' தேன்மொழியாக நம்பிக்கையூட்டும் நல்மருந்தாகக் காட்சிதரா நிற்கின்றது. தமிழ்த்தாயை, தமிழர்எல்லாருக்கும் தாய், மக்களில் ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டவள் அல்லள் என்று அவளைக் காட்டுங்கள். பிறப் பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற தமிழ்மறைக் கருத்தை ஊன்றவையுங்கள். தமிழ்த்தாய் உங்களை வாழ்த்துவாள்! பார்ப்பனப்புல்லுருவிகளைக் களைந்தெறியப் பாடுபடுங்கள். தமிழ்மண்ணிலே எல்லாரும் ஒருகுலம் எல்லாரும்ஓரினம் என்றிருக்கப் பாடுபடுங்கள். தமிழ்மண்ணும் தமிழ்உள்ளமும்ஒழிந்துவிட்டது என்று அஞ்சியவர் உள்ளத்திலே ஒளியை ஏற்றியிருக்கிறீர்கள். உங்களுக்கு நன்றி. தமிழக அரசுவிடுத்த ''கடவுளரின் உருவப்படங்களை அகற்றுங்கள்'' என்பதை எதிர்த்து R S.S. சனசங்கப் பார்ப்பனக்கூட்டம், அவற்றிற்கு மூளையை அடகுவைத்திருக்கும் அறிவிலிகளின் கூட்டம் அழிந்துபட அவர்களைச் சாடுங்கள். தமிழைக்காப்பாற்றுங்கள். தமிழனைக் காப்பாற்றுங்கள். தமிழ்த்தாயின் ஒளிமணிகளில் நீங்களும் ஒன்றாக ஒளிவீசுவீர்கள். இவ்வுயர்ந்தநம்பிக்கையை ஊட்டிய உங்களுக்கு மகிழ்வுக் கண்ணீர் சோர நன்றியையும் வணக்கத்தையும் கூறுகிறேன். – இறையழகன். பெங்களூர்-1.

பாவாணரின் அரிய நூல்!

வெளிவந்து விட்டது!

o

இந்தியால் தமிழ் எவ்வாறு கெடும்?

o

"இந்தியா பன்மொழி, இன, மதங்கொண்ட பன்னாட்டு உட்கண்டமாதலால், ஒற்றுமையே (Unity)யன்றி, ஒருமை(Oneness) ஒருமைப்பாடு (Integration) ஓரியன்மை (Uniformity) என்பவற்றைப் பெறமுடியாது"

—என்று தெள்ளத் தெளிவாக ஆராய்ந்து கூறி, வரலாற்று உண்மைகளுடன் மெய்ப்பிக்கப்பெற்றுள்ள சிறந்த நூல்.

o தென்மொழியன்பர் ஒவ்வொருவர் கைகளிலும் மிளிரவேண்டிய அரிய நூல்!

உடனே வாங்கிப் படியுங்கள் விலை 1 உருபா.

அஞ்சல் கட்டணம் தனி.

கிடைக்குமிடங்கள்;—

திரு. தே. மணி,
ஆ. 1135, இரண்டாம் மேற்குக் குறுக்குச்சாலை,
காட்டுப்பாடி விரிவு. (வ. ஆ.)

செயலாளர்:
மறைமலையடிகள் மன்றம்,
புன்செய்ப் புளியம்பட்டி, ஈரோடு வழி.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

நமக்கு வந்த மடல்கள்

தண்டமிழ்த் தலைவ! வணக்கம். தென்மொழியையும், தங்களின் கொள்கைகளையும் எங்கள் வட்டத்தில் பரப்பப் பெரிதும் முயன்று வருகின்றேன். எத்துணைப் புன்மைப் புறப்பூசல்கள் விளையினும் தங்களின் மெய்க் கொள்கைகள் மிக அணித்தே பயன் விளைக்கப் போவது இமிழ்கடல் போலும் உறுதி! தங்களோடு சிலகால் ஒட்டியிருந்த சில ''போக்கிலிகள்'' இதுபோது தங்களைவிட்டு வந்து, தங்களின் மெய்த் தொண்டினையும், தமிழ் வாழ்வையும் பழித்துரைத்துப் பொல்லாங்கு பேசி வருகின்றனர். தங்களின் தனித்தமிழ் வாழ்வை, மிகக் கறைபடிந்ததெனப் படம்பிடித்துக் காட்டி, புதிய தென்மொழி யன்பர்கள் மருட்கையுறச் செய்கின்றனர். இதுபோன்ற 'காட்டிக்கொடுப்பு'க் கழிசடைகளையும் திருத்தி, இவ்வேதுங்கெட்ட தமிழகத்தையும் விழித்தெழச் செய்வது என்பது நடைபெற வியலுமா எனப் பலகாலும் எண்ணியுழன்று அலமந்து நிற்கின்றேன். வேறு என் செய்வேன்? நண்பர்களும், நானும் அத்தகைய 'விளைந்த காட்டுக் குருவிகளை' நேரிற் கண்டு பேசும்போது சொல்லறை கொடுத்து வருகின்றோம். பிறழ்ந்து மருளும் அவர்களையும் தங்கள் அறிவின் செறிவால் அரவணைத்து, எம்போலும் இளையோரை வழிநடத்தி வாழ்விக்க வேண்டுமென இறைஞ்சுகின்றேன்.

—நடுவை.முவ. பரமசிவம், திருச்சி.

செந்தமிழ்ச் செம்மலே! வணக்கம். நற்றமிழ்ப் பணிபுரியும் 'தென்மொழி–தமிழ்ச்சிட்டு' இதழ்கள் காலந்தாழ்த்துவரும் உண்மை நிலை அறியாது உளம் துன்புற்ற நான், நேரிற் கண்டு உலகின்முன் படைக்கும் கண்ணீர் வரிகள் இவை:

'தென்மொழி–தமிழ்ச்சிட்டு' அவற்றின் நிலைஎன்ன? அந்த நல்ல இதழ்களின் ஆசிரியரின் நிலை என்ன? அந்தக் கதிரொளியும், தண்ணொளியும், எப்படிப்பட்ட இடர் நிலையில் முகிழ்க்கின்றன? கப்பும் காரிருள் எப்படிப்பட்ட தன்மையுடையது? 'தென்மொழி' 'தமிழ்ச்சிட்டு' பணத்திற்காக நடத்தப்படும் தாள்கள் அல்ல; பைந்தமிழ் நாட்டின் பண்பாட்டுப் பொலிவின் மலர்ச்சிக்கு நடத்தப்படும் மாணிக்க ஏடுகள்! பொன்னும், பொருளும் தங்கள் வாழ்வில் மின்னி, மிளிரவேண்டி வெளியிடப்படும் இதழ்கள் அல்ல; பூண்டற்றுப் புதையுண்டு போகுமோ எழிலார்ந்த இன்பத் தமிழ் என எண்ணிக் கண்ணீரையும், செந்நீரையும் கொட்டி நடத்தப்படும் கொள்கை இதழ்கள். மலைபெயரினும், தம் நேரியகொள்கையினின்று நிலைதளரா நெஞ்சுறுதிகொண்ட அவற்றின் ஆசிரியர் மறைப்புண்டு போய்க்கொண்டிருக்கும் தமிழ் மானம் காக்கும் இன்பத்தமிழ்ப் படையின் இறுதித் தலைவர்! இதனைப் புகழ்ச்சி வேண்டியோ, பெருமை வேண்டியோ உரைக்கவில்லை. உண்மை நிலையை உலகின் முன் நிறுத்தவேண்டி எழுதப்படும்பழுதற்ற வாய்மையுரை இது. ''தெனமொழி''யின் உண்மைநிலை அறியா அன்பர்கள், நண்பர்கள், நல்லோர்கள் ஒருமுறை நேரில் சென்று காணின் உண்மை உணர்வர்; உள்ளம் குமுறுவர்; உரியன புரிகுவர்.

பழிசார்ந்த பணம் விழையாது புகழார்ந்த குணம் விழையும் அதன் ஆசிரியர் சற்றே நிலை தளர்ந்தால் பாதை திருப்பினால், கஞ்சியைக் குடித்துக், கந்தலை யுடுத்தித் தரையினில் உருளும் அவர் தம் இல்லம் பாலைக்குடித்துப் பட்டினை உடுத்திப் பஞ்சு மெத்தையினில்

(தொடர்ச்சி 3ஆம் அட்டைப்பக்கம்)